Regd No M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 18-9-1948 சனிக்கிழமை மலர் 2.

## மறைந்தார் மாவீரர்!

★



பகற் கனவு எனப் பறைசாற்றப்பட்டதை வெறுங்கூச்சலாக்கிய வெற்றி வீரன்! ஒன்பது கோடி இந்திய முஸ்லிம்களிடையே மட்டுமல்லாமல் உலகில் உண்மையை விரும்பும் அனைவரின் நெஞ்சத்தையும் கவர்ந்த அற்புதமான கர்மவீரன்! தளுக்குக்கோ பசப்புக்கோ மயங்கி விடாத தறுகண்ணாளன். எதிர்ப்புகள் மலைமலையாய் அடுக்கிவரினும் அவற்றிற்கு மனந்தளராத எஃகு மனத்தோன்! எவரையும் விவாதத்தில் வெற்றி கொள்ளும் இனிய தர்க்கவாதி! ஆபத்து தொல்லை ஆகியவற்றின் நடுவே அற்புதமாகப் பாகிஸ்தானைச் சமைத்த அருஞ் சிற்பி! பிறந்ததன் பயனைப் பீடு பெறும் நிலையில் நிலை நாட்டிய பெரும் இலட்சியவாதி! பசுங்குழந்தை பாகிஸ்தானின் தந்தை! கவர்னர்-ஜெனரல் ஜனாப் ஜின்னா அவர்கள் காராச்சி மாளிகையில் தம் 72-வது வயதில் 11-9-48ம் நாளிரவு மறைவு எய்தினார்.

சிறுவர் பகுதி.

# பகுத்தறிவுச் சுடர்.

"தாதா"

குன்னக்குடியிலே கன்னக்கோலய்யன் என்ற ஒரு சோம்பேறிப் பார்ப்பான் இருந்தான். அவன் பரம்பரை பரம்பரையாய்ச் சோசியம் சொல்வதாக ஏதோ உளறி ஊரை ஏமாற்றி வயிறு வளர்க்கும் உஞ்சத்தர் குடும்பத்தில் பிறந்தவன்.

ஒரு நாள், குன்னக்குடிக்கோயில் குழவிக்கல்லைக் கழுவி வயிறு வளர்க்கும் சின்னக்குடிக் காலாடி அய்யனைக் கன்னக்கோலய்யன் சந்தித்து, 'ஓய் காலாடி; உம்ம பிழைப்புத்தான் வரவரக் குறைந்துண்டே வருதேங்காணும்! அதைத் தொலைச்சுத் தலையை முழுகிண்டு சோசியம் சொல்லக் கத்துக்கப்படாதோ?' என்றான்.

'சோசியந்தான் என்ன வாழறது...? சூத்திராளுந்தான் சோசியம் சொல்லிண்டலையறா! எல்லார் பிழைப்புந்தானேங்காணும் சந்தி சிரிச்சுண்டிருக்கு!' என்றான் காலாடி.

அவர்கள் இருவரும் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது, அவ்வூர் அம்பலக்காரர் மகன் குமரன் பள்ளிக்கூடப் புத்தகங்களைச் சுமந்துகொண்டே அங்குவந்தான்.

குமரனைக் கண்ட கன்னக்கோலய்யன், வாடிக்கையாகச் சரக்கு வாங்கிச்செல்ல வருபவனைக் காணும் கடைக்காரனைப்போல் முகமலர்ச்சியோடு வரவேற்று, 'அம்பலம் என்னை அழைச்சுண்டு வரச் சொல்லுச்சா...?' என்று ஆவலோடு கேட்டான்.

'உன்னை இல்லை. சின்னக்குடிக் காலாடி அய்யரைத்தான் கையோடு கூட்டிக்கொண்டு வரும்படி அப்பாவின் கட்டளை.' என்றான் குமரன்.

காலாடி அய்யன் மிக்க மகிழ்ச்சியோடு குமரனை நோக்கி 'இன்றைக்கு உங்க ஆத்துலே என்ன விசேஷம்?' என்று கேட்டான்.

'என்ன விசேஷமாக இருக்கலாம் என்பதைக் கன்னக்கோலய்யரைச் சோசியம் பார்த்துச் சொல்லச் சொல்லும், பார்க்கலாம்' என்றான் குமரன்.

உடனே கன்னக்கோலய்யன் பஞ்சாங்கத்தைக் கையில் எடுத்தான்; ஏதோ இரண்டு மூன்று எண்களைப்போட்டுக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துப் பார்த்து விட்டு, 'ஏதாவது ஒரு மலரின் பெயர் சொல்' என்று குமரனிடம் கேட்டான்.

'மல்லிகை' என்று குமரன் கூறினான்.

'மல்லிகையா!' சரி. அப்படியானால்...இப்போது உங்காத்தில்... உம்...மங்கலகரமான ஒரு விசேஷந்தான் நடந்தாக வேண்டும்!' என்றான் கன்னக்கோலய்யன். 'இல்லை' என்று மறுத்து விட்டான் குமரன்.

'இல்லையா?' என்று ஆச்சரியப் படுபவனைப் போல் பாசாங்காக நடித்து முணு முணுத்துக் கொண்டே 'உம். இன்னொரு மலரின் பெயர், அல்லது எழுக்கு மேலே இருபதுக்குள்ளே ஏதாவது ஒரு எண் சொல்லு பார்க்கலாம், என்றான் கன்னக்கோலன்.

'எட்டு' என்றான் குமரன். 'ஊப்! அப்படியானால்...... அமங்கலகாரமான காரியந்தான் நடந்தாக வேண்டியிருக்கிறது. இதில் சந்தேகமே இல்லை, என்றான் கன்னக் கோலய்யன்.

'ஒரு வீட்டில் ஏதாவது ஒரு காரியம் நடைபெற்றால் மங்கலம் அல்லது அமங்கலம் என்ற இரண்டில் ஒன்றாகத்தானே இருக்கும்! இதை நீர் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ? சென்ற ஆண்டு நீர் நல்ல நாள் பார்த்துச் சுப முகூர்த்தம் குறித்துக் கொடுத்த பிறகு தான் என் அண்ணனுக்குத் திருமணம் நடந்தது; அதே அண்ணனுக்குத் திவசம் கொடுக்கத்தான் இந்த ஆண்டு காலாடி அய்யரை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறேன். மங்கல மந்திரம் ஓதி மூட்டை கட்டிக்கொண்டு சென்ற மறு ஆண்டுக்குள்ளாகவே, அமங்கல மந்திரமும் ஓதி அரிசி, காய்கறி பருப்புகளை அள்ளிக் கொண்டு போக ஆயத்தமாகவும் இருக்கிறார் இந்த அய்யர்! இப்படிப்பட்ட உங்கள் மந்திரங்களையும், சோசியங்களையும் நெருப்பில் போட்டுக் கொளுத்தினால் தான் என்ன?' என்று கோபமாகக் கூறினான் குமரன்.

அதைக் கேட்ட கன்னக்கோலய்யனுக்கும், காலாடி அய்யனுக்கும் ஆத்திரம் பொங்கி விட்டது. இருவரும் சேர்ந்துகொண்டு குமரனைத் தாறுமாறாகத் திட்டி 'அற்பாயிசில் சாகக்கடவாய்' என்று சபித்தனர்.

குமரனும் பதிலுக்குப் பதில் நன்றாகத் திட்டிவிட்டு 'நீங்கள் வாழ்த்திய வாழ்த்தில் என் அண்ணன் வாழ்ந்து விட்டான்! இப்போது நீங்கள் சபித்தவுடன் நாங்கள் செத்து விடுவோம்!! இல்லே...?' என்று ஏளனமும் செய்தான்.

அவ்வளவுதான், குமரனைப் பிடித்து அடிக்கக் கன்னக்கோலய்யன் துள்ளி எழுந்தான். எழுந்த வேகத்தில், அவன் வீட்டு நிலையில் அவனே மோதி மண்டையை உடைத்துக் கொண்டான். இரத்தம் பீறிட்டு வடிந்தது. காலாடி அய்யன் கன்னக்கோலய்யனை அப்படியே அழைத்துக் கொண்டுபோய் குமரனின் அப்பாவிடம் காட்டிக் குமரன்தான் இப்படி மண்டையை உடைத்து விட்டான் என்று பழி சுமத்தினான்.

அம்பலக்காரர் கன்னக்கோலய்யன் நிலையைக் கண்டு மனங்கலங்கித், தன்மகன் குமரன் குற்றவாளிதானா என்றுகூட விசாரிக்காமல், குமரனைப் பிடித்துத் தடியால் பலமாக அடித்து விட்டார்.

குற்றமற்ற குமரன் தன் தந்தையால் கொடுமையாகத் தாக்கப் படும் போது, பயந்து நடுநடுங்கி விட்டான். அதே நோயாகச் சில தினங்கள் அவன் படுக்கையில் கிடந்தும் புலம்பிக் கொண்டிருந்தான்.

குமரனுடைய தாயார் குமரனின் புலம்பலைக் கண்டு அவன் அருகில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அம்பலக்காரரும் தன்னுடைய மூர்க்கத்தனத்திற்காக வருந்திய வண்ணம் குமரன் உடம்பில் மருந்து தடவிக்கொண்டிருந்தார்.

குமரன் ஒரு நாள் திடீரென்று புலம்பலை நிறுத்தி விட்டு அம்பலக்காரரை நோக்கி 'அப்பா! சோசியம் என்பது உண்மைதானா.....?' என்று மெதுவாகக் கேட்டான்.

[தொடர்ச்சி 15ம் பக்கம்]

# ஜனாப் ஜின்னா வாழ்க்கைக் குறிப்பு.

★

காயிதே ஆஜாம் முகம்மதலி ஜின்னா அவர்கள், கராச்சிப் பெரு வணிகர் ஜனாப் ஜின்னா முஞ்ஜாவின் முதல் மகனாக 1876ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ம் நாள் பிறந்தார்.

கராச்சியில் கல்வி கற்றபின் தனது 16வது வயதிலேயே சட்டப்படிப்புக்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு, காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் கூட்டுறவு ஏற்பட்டதும், அவரது அந்தரங்கக்காரியதரிசியாக இருந்து உழைத்ததும், சட்டவாதத் துறையில் நிறைந்த பாண்டித்தியம் பெற்றதும் முக்கியமானதாகும்.

நான்கு ஆண்டிற்குப் பின் 1896ல் கராச்சி திரும்பி வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். அடுத்த ஆண்டில் பம்பாய் வந்து அதே தொழிலில் ஈடுபட்டிருப்பினும் பல தொல்லைகளுக்கிடையே 1898ல் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் தம்மை ஒரு வக்கீலாகப் பதிவு செய்து கொண்டார். 1900ல் அவர் மூன்றாவது மாகாண மாஜிஸ்டிரேட்டாக தற்காலீகமாய் நியமிக்கப்பட்டார்.

இப்பதவிக்காலம் முடிவடைந்தபின் மீண்டும் வக்கீல் தொழிலில் ஈடுபட, இரண்டு ஆண்டுகளுக்குள் பெரும் பிரவித்தமடைந்து மாதம் 2000ம் வருமான நிலையையும் பெற்றார்.

வருமானத்தைப் பெரிதாகக் கருதாமல் பொது நலப்பணியில் ஈடுபட்டு காங்கரசில் தீவிரமாக் உழைக்க ஆரம்பித்த ஜின்னா அவர்கள் 1906ல் கல்கத்தாவில் கூடிய காங்கரசிலும் 1911ல் கராச்சியில் கூடிய காங்கரசிலும் கலந்து கொண்டார். 1909-ல் முஸ்லிம்களின் பிரதி நிதியாக சட்டசபை அங்கத்தினரானார்.

1906-ல் முஸ்லிம் லீக்கிற்கு விதை ஊன்றிய நேரத்தில் தோழர் ஜின்னா அவர்கள் முஸ்லிம்கள் காங்கரசிலிருந்து பிரியக்கூடாது என்று பெரு முயற்சி செய்தவர். 1910-ல் ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தனித் தொகுதி தேர்தல் முறை கூடாது என்று காங்கரசில் தீர்மானம் கொண்டு வந்தவர். இக்காலத்தில் இவர் இந்து முஸ்லிம் அய்க்கியத்தூதர் என்கிற பட்டமும் பெற்றார். இவர் செய்த சேவையைப் பாராட்டிப் பம்பாய் பொது மக்கள் இவர் பெயரால் ‘ஜின்னா மண்டபம்’ என ஒன்றைக் கட்டினர்.

1913-ம் ஆண்டுதான் தம்மை முஸ்லிம்லீக் உறுப்பினராக முதன் முதல் பதிவு செய்து கொண்டார். 1913-ல் இங்கிலாந்து சென்று ஓய்வு பெற்றிருந்தாலும் 1914-ல் காங்கரசின் சார்பாக இங்கிலாந்து சென்ற ஒரு தூதுக்குழுவினுடனும் சென்று பணியாற்றினார்.

1915-ல் காங்கரஸ்-லீக் இடையே பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்த உழைத்தார். 1916-ல் அகில இந்திய முஸ்லிம்லீக்கின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920-ல் காந்தியாரின் ஒத்துழையாமைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் பலமாக எதிர்த்தார். இந்த ஆண்டில் இவர் திரும்பவும் லீக்கின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இங்கிலாந்தில் நடந்த முதலாவது இரண்டாவது வட்டமேஜை மாநாடு இரண்டிலும் [1929—1930] கலந்து கொண்டார். இவரின் புகழ்பெற்ற 14-கோரிக்கைகள் முஸ்லிம்களின் தனிச் சலுகைகளை வற்புறுத்தியது. இதற்குக் காங்கரஸ் பெருந் தலைவர்கள் இணங்கவில்லை. 1935-ல் 3-வது வட்டமேஜை மாநாடு நடந்தபோது இவர் கலந்துகொள்ளவில்லை.

1934-ல் மூன்றாவது தடவையாக இவர் லீக் தலைமைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இந்தியப் பிரிவினை ஏற்படும் நாள் வரை இவரே ஆண்டு தோறும் லீக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியப் பிரிவினைக்கு முன்னால், மத்திய சட்டசபையில் உறுப்பினராக-எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். காங்கரசுக்கும் லீக்குக்கும் இடையே எப்படியாவது ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்று காந்தியாரோடு பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினார். 1947-ல் தான் பிரிவினைத் திட்டத்திற்கு ‘பாகிஸ்தான் உதயத்திற்கு’ காங்கரஸ் இணங்கியது.

1947-ல் தோன்றிய பாகிஸ்தான் டொமினியனுக்கு கவர்னர்—ஜெனரலாக நியமிக்கப்பட்டார். பாகிஸ்தான் அரசியல்நிர்ணயசபைக்கும் அவர்தான் தலைவர்.

பாத்திமா ஜின்னா என்ற இவரின் சகோதரிதான் இவரின் அரசியல் வாழ்வுக்கு ஒப்பற்ற துணையாக விளங்கியவர். இவரின் மனைவி, பார்வி வணிகரான ஸா தினஸா பெடிட்டின் மகள் ரத்தன்பாய் பெடிட். இந்த அம்மையார் ஏற்கனவே மறைந்து விட்டார்கள். இவரின் ஒரே மகளின் பெயர் தோழியர் நெஸ் வாடியா.

11—9—48-நாள் மாலை 4-30-மணிக்கு தான் குவெட்டாவிலுள்ள ஜியாரத்திலிருந்து கராச்சி திரும்பினார். இரவு 10-25-க்கு மாரடைப்பால் திடீரென மறைவுடைந்தார்.

## பொதுக் கூட்டம்.

6—9—48 ௳ இரவு 8½ மணிக்கு பஞ்சமாதேவி மெத்தோட் மிஷியன்ஸ் பாடசாலைக்குமுன்பு கருஞ்சாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஈரோடு, தோழர் பி ஷண்முகவேலாயுதம் அவர்களும்; கே. பாலய்யா அவர்களும்; பி. ஆறுமுகம் அவர்களும் கிராமம் முன்னேற்றத்தைப்பற்றி பேசினார்கள். பி. ஆறுமுகம் நன்றி கூற இரவு 10 மணிக்கு இனிது கூட்டம் முடிந்தது.

## திருமணம்.

9—9—48 வியாழக்கிழமை காலை 6-மணிக்கு மன்னார்குடி உடையார் தெரு மணமகள் இல்லத்தில் தோழர் எஸ். கருணானந்தம்—தோழியர் நாகரெத்தினம் அம்மையார் திருமணம் புரோகிதமொழிந்த முறையில் நடைபெற்றது.

பிறகு 10-30 மணிக்கு மணமக்களைப் பாராட்டி ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். பி. காளியப்பன் முன்மொழிய தோழர் பி. சண்முகவேலாயுதம் வழிமொழிய தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை தாங்க, தோழர் டி. கே. சீனிவாசன் தளபதி சி. என். அண்ணாதுரை எம். எ. ஆகியோர் மணமக்களைப் பாராட்டி விரிவாகப் பேசினர். தோழர் எஸ். கருணானந்தம் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

## தியாகராய வாலிபர் சங்கம் நிர்வாகக் குழு தேர்தல்.

அருப்புக்கோட்டை செப். 11.

இன்றிரவு 8 மணிக்கு ஷை சங்கத்தில் தோழர் சோ. கந்தசாமி அவர்கள் தலைமையில் கூடிய உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டவர்களடங்கிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்களான எம். எஸ். இராமசாமி தலைவர், மீ. பெரியசாமி துணைத்தலைவர், கே. இராமசாமி சு. காளிமுத்து செயலாளர்கள், சிவ. சண்முகசுந்தரன் பொருளாளர், க. ம. கா. சின்னமல்லையா, தி. முத்துசாமி, சோ. முத்துராமலிங்க சேது, சோ. சங்கரலிங்கம், வீ. கு. மலைச்சாமி, ரா. வடிவேல் முருகன், எஸ். சண்முகம் உறுப்பினர்கள்.

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# யார் குற்றவாளி?

போட்டி

எண் 1.

யார் குற்றவாளி......நானா...நானா குற்றவாளி...நானா கொலைகாரன்...

எனக்கா தூக்கு...என் கழுத்தையா சுருக்கிட—என் உயிர் சுருக்கிடப்பட்டா கொல்லப்படவேண்டும்......எதற்காக...என்ன குற்றத்திற்காக...

நான் தான் கொன்றேன்...மழலை மொழிகூடப் பேச முடியாத பிஞ்சு இதயத்தை, பிறந்த குழந்தையைப் பிறந்த உடனே நான் தான் கொன்றேன்......வெள்ளரிப்பழம் போன்று தொட்டவுடன் விண்டுவிடும் பச்சைக் குழவியை, எங்கள் காதலில் கனிந்த கனியை கொன்றேன்—என் வாழ்வைப் போக்கும் கடுவிஷம் என்று நான் நம்பியதால்!

பனைமரத்தடியிலே நின்று பாலைக் குடித்தாலும் பார்ப்பவர் 'பனங்கள்ளைத்தான் குடிக்கிறான் பயல்' என்பதைப் போன்று சமுதாய மடமையிலே, சாத்திரத்தின் விஷவித்து உடலிலே ஊறிப்போன தன்மையினால், பழக்க வழக்கமென்னும் வேலியிடையே அறிவுப்பயிர் பரவ முடியாதபடி தடுக்கப்பட்டதால்தான் கொன்றேன்—நீலக் கடலிடையே நீந்தி வரும் கட்டுமரம் போலக் காலக்கடலிடையே நீந்திவந்த என்காதற் கனியை!

ஆம் நான் தான் கொன்றேன்—நினைவிலே போராட்டம் சுழியிட, நடுங்குகின்ற கைகளிலே, நவிலரும் நலம் வாய்ந்த குழவியை ஏந்திக் கொஞ்சி மனம் குளிரவேண்டிய நேரத்திலே, மெல்லிய ரோசா மலரைக் கசக்குவது போல அதன் கழுத்தை அழுத்தித்தான் கொன்றேன்...

கோமள உள்ளக்குழவியின் கொஞ்சு மொழியைக் கேட்கவேண்டிய என் காது, நீதியின் பேரால் வீற்றிருக்கும் தங்கள் நஞ்சு மொழியைக் கேட்கிறது...! கை கால்களை அசைத்து, கோல அலை நாட்டியமாடிப் பண்பாடுவதைப் போல, என் உள்ளத்தில் உவகையூட்ட நடனமாடும் புதுமைச் சிற்பத்தைக் காணவேண்டிய என் கண்கள் தூக்கு மேடையைக் காணப் போகின்றன...குழவியின் மழலைமொழியை மாந்தி, மனம் மட்டற்ற மகிழ்வில் மூழ்கித் தழைத்து அக்குழவியின் வருங்கால வாழ்வைப் பற்றித் திட்டமிட்டு, தெவிட்டா இன்பச் சுழலிலே இயங்க வேண்டிய என்னுள்ளம், தூக்குமேடையில் தூக்கிடப்பட்ட உடன் எப்படி உயிர் போகும் என்று எண்ணமிட்டு நடுங்குகிறது! பூப்போன்ற மலர் முகத்தை முகத்துடன் அணைத்து, உச்சிமோந்து, உவகை கனிந்து உள்ளத்தில் அன்பு வெள்ளம் பெருகி, ஆறாத இன்பம் அடைய வேண்டிய என்மனம், தூக்குமேடையில் தொங்குகின்ற சுருக்குக் கயிற்றை முத்தமிடவா என்று திகைத்து நிற்கிறது.

என் குழந்தையை மட்டுமா கொன்றேன்...இன்ப ஊற்றினையும் அழித்தேன்...கனிந்த இதழிலே களிதேக்கி, கண்களிலே காதல் ஒளி தேக்கிக், கன்னக் கதுப்பிலே அன்பின் அருளீந்த என் காதற் பேற்றையும் கொன்றேன்... "காதலனே" என்றழைத்த கனிவாய், கத்தமுடியாதபடி திகைத்துத் தேங்கிய கண்ணீர்த்துளிகள் வழியும் போது சிந்தையைக் கல்லாக்கித் தான் கொன்றேன்.

முதன் முதலாக, சிற்றோடைபண் யிழற்றிப் பால் நிலவினொளியிலே பளிங்கைஉருக்கி ஊற்றிய பாலாறென ஓடிக் கொண்டிருக்கும் பூங்காவிலே, இன்ப வசந்தத்தின் எழுச்சி மணம் இதயத்தில் தோய்ந்து எடுத்துரைக்க இயலாத விதமாய் இதயயாழை மீட்டி பண்கூட்டும் நேரத்திலே, தீந்தேனை உள்ளடக்கி தென்றலிலே ஊஞ்சலாடும் மலர்கள் விரிந்து மணத்தைப் பரப்புவதுபோல கருத்து விரிந்து கமழும்போது, இன்பப் போதையிலே என இதயத்தை அமிழ்த்திய அணங்கின் அன்பு இதயம் கருக, காதல் உள்ளம் கன்றிவிட, உள்ள ஊற்று தூர்ந்துவிட கொன்றேன்...ஆம் நான் தான்... விலங்குகள் முத்தமிடும் இக்கரங்களால் தான் கொன்றேன்

அவள்......எங்கள் குழந்தையைக் கொல்ல என் கரங்களைத் அச் சிசுவின் கழுத்தருகே கொண்டு செல்லும் பொழுது அவள் குமுறிய உள்ளத்திலின்று வெளிவந்த சொற்கள்...இன்னும் என் இதயத்திலே மோதிக் கொண்டிருக்கின்றன; குஞ்சைக் கொத்தவரும் சேவலைக்கூட எதிர்க்கும் தாயுள்ளம், சீற்றத்தின் சிங்கமாய் விளங்கிய அவள் உருவம் என் சிந்தையில் நின்று சிரிக்கிறது இன்னேரத்தில் கூட......

*                    *

நெஞ்சிலே அமிழ்ந்து கிடக்கும் நஞ்சுத் தன்மை முகத்திலே பிரதி பலிக்கும் உருவம்...மங்கிய விளக்கின் ஒளியிலே உருக்கின் தன்மை பெற்ற உள்ளத்தின் முகவொளி......

கலக்க மற்ற நெஞ்சிலே காணும் களிப்பு கன்னக் கதுப்பிலே கூத்தாட, காதலின் இன்பப் பேற்றிலே கனியைக் கண்டு விட்டோம் என்ற தாய்மைக் களிப்பிலே காணும், அழியாத மகிழ்வு ஒளிகொள்ளக், கண்மூடிக் கனவுலகிலே நீந்தித் திளைக்கும் தாய்...

பக்கத்திலே, பாவ உலகின் உயர்வு தாழ்வு நுழையாத நெஞ்சத்துடன், பாவையின் அணைப்பிலே கட்டுண்டு, அமைதியின் அரும் பேறு அமுதமுகத்திலே ஊற்றுப் பெருக்கெடுத்தோடும் தன்மையில் தோய்ந்திருக்கத், துவண்ட உடலுடன் தூங்கும் சேய்...

மங்கிய விளக்கொளியில், கடு முகத்திலே கொடுநெஞ்சின் நஞ்சு கொப்பளிக்கக் குழந்தையைக் கொல்ல வந்த பேய்...

மண்ணெங்கும் மாந்தர் துயிலும் மரண அமைதியே பின்னணி...

இத்தகைய சூழ்நிலையிலே, எடுத்த அடி சப்தமிடாது இட்டடிவைத்துச் சென்றது மிருக உள்ளம் படைத்த மனித உருவம்...

பால் போன்ற பழுதில்லாத பசுங் குழவியின் பாச முகத்தைக் கண்டதும் ஒரு பரிவு... அதன் கழுத்தருகே சென்ற கை மீண்டது... உள்ளத்திலே போராட்டம்...

"பால் மணம் மாறாத பச்சைப்பசும் பாலகனை கொல்லவா... பாவம்... சிசுக் கொலை தகாது..."

"ஏம்பா... உனக்குப் பிறந்திருக்க பிள்ளே உன்னையே கொல்லப் போகுது...... எப்படின்னா அது பொறந்திருக்க நேரம் அப்படியாப்பட்ட நேரம்...இன்னும் நாலு மாசத்திலே தகப்பன் சாகணும்ன்னு இருக்கு...தெரிஞ்சுதா....சரி...என்ன எட்டணாத்தானா...இன்னும் ஏதாவது..."

"காசு பறிப்பதற்காகக் கண்டதைக் கூறி இருப்பான்...அவன் சொல்லை நம்பியா அரும்பினை அழிப்பது..."

"ஏண்டா நான் சொல்லுவது பொய்யா...உன் தலையில் இடிவிழ... இது பலிக்காவிட்டால் என் சோசியப் பழக்கத்தையே விட்டுடுறேன்......சரியா..."

"சொல்லுவது உண்மையாயிருக்கலாம்...ஆனால் ஏதுமறியா இளம்பாலகனை, இதயத்திலே ஈரத்தைஅகற்றி விட்டு எப்படிக்கொல்வது..."

"தன்னைக் கொல்லவரும் பசுவினைக் கொல்லலாம் என்று தர்ம சாத்திரங்கள் சாற்றுகின்றனவே..."

"ஆம் கொன்றுவிட வேண்டியது தான்..."

காய்த்துப்போன கைகள், கவலை என்பது எதென்று அறியாத சிசுவின்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

நூலக அறக்கட்டளை

# அம்பலம்.

## நமது வெற்றி!

இதைப் பார்த்தவுடன் இந்தி எதிர்ப்பிலே நாம் வெற்றியடைந்துவிட்டோமா? இந்தி மந்திரி ஆவினாசியாருக்கு நல்ல புத்தி வந்து கட்டாய நிலையை மாற்றிவிட்டாரா? மாற்றிவிடுவேன் என்று ஏதாவது குறிப்புக் காட்டினாரா? பிரதம மந்திரிதான் இதைப்பற்றி ஏதாவது பேசினாரா? எங்கே? எப்பொழுது? என்றெல்லாம் எண்ணிவிடாதீர்கள். அவ்வளவு சுலபத்திலா, அனுபவம் பெறவேண்டிய அவர்கள் திருந்திவிடுவார்கள்? ஒரு வேளை நாய் வாலை நிமிர்த்தினாலும் நிமிர்த்தலாம், இவர்களின் கோணல் புத்தியை நிமிர்த்த முடியாதுபோலிருக்கே என்று, மேலிடமே தலையிட்டு இரவல் மூளை கொடுக்கவேண்டியதாயிருந்தாலும் இருக்கலாம். இப்போது இங்கு நமது வெற்றி என்பது வேறு சங்கதி.

நம் சமூகத்தில் ஆணுக்கும்—பெண்ணுக்கும் இடையே, மனுதர்ம நீதி புகுந்த பிறகு, பல ஆயிரம் வருஷங்களாக இருந்து வரும் மதிப்பென்ன? என்றால், நீங்கள் சுருக்கமாக என்ன கூறுவீர்கள்?

இந்தக் கேள்விக்குப் பெரியாரவர்கள் நெடுங்காலத்திற்கு முன்னாலேயே பதில் கூறியிருக்கிறார்கள். பதில் மட்டுமா? ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாகப் பெண்கள் வாழ வேண்டுமென்பதற்கு வழியும் சொல்லியிருக்கின்றார்கள்.

இப்போது, நம் சமூகத்தில் ஆண் என்றால் தங்கப்பாத்திரம்' பெண் என்றால் மண் பாத்திரம் என்ற நிலைமையிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டுமென்றால், பெண்களும் தங்களைத் தங்கப்பாத்திரமாகக் கருதி நடந்துகொள்ள வேண்டும். இது தான் பெரியாரவர்களுடைய பதில்—பெண்களுயர்வுக்கு வழி!

சுயமரியாதை இயக்கம், பெண்களுக்கு இதைத்தான் சொல்லியது. இந்த மனுதர்ம வக்கிர ஆட்சி பரவிய நாட்டிலே, தங்கப் பாத்திரத்தை யார் வேண்டுமானாலும் தொடலாம், எந்த இடத்தில் வேண்டுமானாலும் கிடக்கலாம். தீட்டுப்பட்டாலும் கழுவினால் போய்விடும். மண் பாத்திரத்தை அப்படி யாரும் தொட்டுவிடக்கூடாது, இடமும் மாறக்கூடாது. தொட்டுவிட்டாலோ, மாறிவிட்டாலோ கழுவினால் போகாது, தேய்த்தால் போகாது என்றபடி தீட்டு ஒட்டிக்கொண்டுவிடும். பாத்திரத்தையே உடைத்துக் குப்பைமேட்டுக்கு அனுப்புவதுதான் அதற்கு முடிவு.

ஆண்கள் எத்தனை பெண்களுடன் வேண்டுமானாலும் தொடர்பு வைத்துக்கொள்ளலாம், எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கலியாணம் செய்துகொள்ளலாம். முதல் மனைவிகள் பலரிருந்தாலும் அக்கரையில்லை, மேலும் மேலும் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ளலாம், அதற்கு மனமில்லையானால் 'வைப்பாக' வைத்துக் கொள்ளலாம், அதற்கும் இஷ்டமில்லையானால் கூலிக்கு வேண்டுமானாலும் அப்போதைக்கப் போது அமர்த்திக் கொள்ளலாம். ஆண்களை யாரும் குற்றம் சொல்லக் கூடாது, குற்றம் சொல்லவும் முடியாது. ஏன்? ஆண் தங்கப்பாத்திரம்!

தொண்டு கிழவனாயிருந்து ஆண் தன்மையே இழந்த புருஷனாயிருந்தாலும், தீராத வியாதிக் காரனாயிருந்தாலும், நாள் தவறினாலும் அடியும் உதையும் கொடுக்கத் தவறாத முரடனாயிருந்தாலும், அறிவற்ற பாமரனாயிருந்தாலும், என் அலியாயிருந்தாலும் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் தத்தம் தலைவிதி என்றே அவற்றை எண்ணவேண்டும். தாங்கள் செய்தபாவத்தினாலேயே, தங்கள் கணவன்மார்களுக்கு இப்படிப்பட்ட நிலையேற்பட்டது என்று தங்களைத் தாங்களே நொந்துகொள்ளவேண்டும்.

இது அடுக்குமா? மணப்பதற்கு முன்னால் மணவாளன் யார் என்று தெரியாமல், மணப் பெண்ணின் மன விருப்பம் எது என்பதிலே சிறிதும் கவலைப்படாமல், பெற்றோர்களின் ஆத்திரம்தீர மணஞ்செய்து கொடுத்துவிட்டு, பிறகு அவள் வாழ் நாள் முழுதும் மனமிடிந்தே சாகவேண்டுமென்றால் இது நியாயமா?

"அவள் தலையில் அப்படி எழுதியிருந்தால் அதற்கு யார் என்ன செய்வது?" இதுதான் சொல்லப்பட்டு வந்த பதில். பெண்களாலும் அங்கீகரிக்கப்பட்டு வந்த பதில்!

கணவனை வெறுக்கும் ஒருகாரிகை மற்றொரு கட்டழகனோடு தொடர்பு கூடவைத்துக் கொள்ள வேண்டாம். இளம் வயதில் பழகிய வேறொரு ஆடவனை நீண்டநாளுக்குப்பிறகு சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றால் அப்போது வாயைக்கூட அசைக்கக் கூடாது, முகமலர்ச்சியைக்கூட காட்டக்கூடாது. பலர் நடமாடும்தெருவில் சற்று நேரம் அதிகமாக நின்றுவிடக் கூடாது. நின்றால் குற்றம்! சிரித்தால் குற்றம்! குனிந்தால் குற்றம்! நிமிர்ந்தால் குற்றம்! ஏன்? மண்பாத்திரம்!

பெண்கள் ஏன் மண் பாத்திரமாகத் தங்களைக் கருத வேண்டும்? அவர்களும் தங்கப்பாத்திரமாக ஏன் ஆகக் கூடாது? இவ்வாறு நாம் கேட்ட போது, நாட்டில் அவ்வாறே சில பெண்களை நடவடிக்கையிலும் கைக் கொள்ளும்படி தூண்டிய போது சு. ம காலிகள்! முறை கெட்டவன்கள்! இது போல்தான் நமக்குப் பரிசுகள்!

கவலைப்படவில்லை, கூறிவந்தோம். கட்டாயமாகச் சட்டமே கொண்டு வந்து இந்த அநியாயத்தை ஒழிக்க வேண்டுமென்றோம். மக்களும் உணர ஆரம்பித்தனர். இன்று காங்கரஸ் ஆட்சியில் காளேசுவரராவ் மசோதா கொண்டு வந்து நிறை வேற்றிவிட்டார். இனி, முதல்மனைவி உயிரோடிருக்கும் போது இரண்டாவது ஒரு பெண்ணை ஒரு ஆடவன் மணஞ் செய்து கொள்ளக்கூடாது. செய்து கொண்டால் குற்றம். உடனிருந்து உதவி செய்வதும் குற்றம்! அவசியமான காரணத்தின் மீது இருவரில் யார் வேண்டுமானாலும் விவாகரத்தும் செய்து கொள்ளலாம். இந்த இரண்டும்தான் அந்த மசோதாவின் அடிப்படை.

பெண்கள் முன்னேற்றத்திற்கு இவ்விரண்டும் போதாது, இன்னும் எவ்வளவோ சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்றாலும், இந்த இரண்டுங்கூட அநுபவத்திற்கு வரும்போது, அவசியமான பல திருத்தங்களை ஏற்க வேண்டியதாயிருக்கிற தென்றாலும், இந்த மசோதாவை நாம் பெரிதும் வரவேற்கிறோம். தோழர் காளேசுவரராவ் அவர்களையும் பாராட்டுகிறோம். மேலும் இதை நமது வெற்றி என்றே சொல்லுகிறோம்.

காங்கரஸ்காரர்கள் கூடிய சட்டசபையிலே நிறைவேற்றப்பட்டிருக்கும் இந்த மசோதாவை, நமது வெற்றி என்று சொல்வதிலே எனன நியாயமிருக்கிறது? இப்படி யாரேனும் எண்ணலாம்.

இந்த முறை கூடாது என்று ஸ்தாபன ரீதியாக, இயக்கப்பிரச்சாரமாகக் கொண்டு நாட்டிலே பரப்பியவர்கள் சுயமரியாதைக்காரர்கள். அதை அப்போதெல்லாம் காங்கரசிலுள்ள ஒரு சிலர் கட்டாய நிலை ஏற்பட்டு ஆதரிக்க வேண்டிய நிலையில் ஆதரித்தாலும், காங்கரஸ் ஸ்தாபன ரீதியாக எப்போதும் இதை ஆதரித்ததில்லை. முன்பு உள்ள நிலைகூட இல்லை. இன்று மசோதா சட்டசபையில் கொண்டுவரப்பட்ட போது காங்கரஸ் தோழர்களின் நிலை எப்படி? பலர் எதிர்த்தார்கள். சமுதாயத்திற்கே ஆபத்து! என்று பூச்சாண்டி காட்டினார்கள். அஞ்சலைகள்கூட அஞ்சினார்கள். இவர்கள் எல்லாம் யார்? காங்

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

# வெட்கம்! வெட்கம்!

☆

பகுத்தறிவின் பாதையிலே பயமின்றி, மனிதன் தன் எண்ணப்படி எதையும் கடவுள் இல்லாமல் காரியத்தை முடித்து வெற்றி அடையும் காலம் இது. ஆனால் நாம் நம் நாட்டில் வெட்கப்படும் நிலையில் தானே, இருக்கிறோம். தோழனே! நீ சிந்தித்தாயா?

கப்பல், நீர்மூழ்கிக்கப்பல், அதை ஒழிக்க குண்டு, விஷப்புகை, அதை தடுக்க முகமூடி, வேண்டியபோது மழைபெய்விக்கவும், பெய்யும் மழையைத்தடுக்கவும் கருவி, விமானத்தில் பறந்துகொண்டே, பூமியில் உள்ள தங்கச் சுரங்கங்களை பார்க்கும் கருவி, விமானம், ஆளில்லாத விமானம், மலை உச்சியில் ஏற மிஷின், மலையைக் கரைக்க அணுக்குண்டு, அணுவைப் பிளக்க மிஷின். இன்னும் எண்ணற்ற புதிய பயன்தரும் நூதன கருவிகள், மனிதனின் உழைப்பைக் குறைக்கும் முறையில் கண்டு பிடிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அறிவாளிகள் எல்லாம் நம் சரஸ்வதி பூசை, ஆயுதபூசை கொண்டாடாதவர்கள்.

தோழனே! நீ சரஸ்வதி பூசைக்கு வைக்கும் சூடமும், சரஸ்வதி படத்திற்கு அலங்காரம் செய்யும் கண்ணாடியும், சரஸ்வதியின் பிம்ப அச்சும், நவராத்திரி கொண்டாடாத மேனாட்டினர் கண்டுபிடித்தது தான். அப்படிப் பட்டவர்களுக்கே சரஸ்வதி பூசையைப் பற்றி ஒன்றுமே தெரியாது. நூற்றுக்குத்தொண்ணூறு பேர்படித்து அறிவாளிகளாக இருப்பது மேனாட்டுச்சரஸ்வதியின்கடாட்சமும் அல்ல! அப்படிப்பட்ட தெய்வமும், பூசையும் உனக்குத் தேவையா?

பகுத்தறிவு தோழனே! சரஸ்வதி பூசையில் உன் புஸ்தகங்களை வைத்து மனதார வேண்டிக் கொள்கிறாயே, அந்தப் புஸ்தகத்தினுள்ள தாள்களும், அச்சிடப்பட்ட அச்சுத்துண்டுகளும், மையும், சரஸ்வதி என்ற பெயரையும் கேட்டறியாதவனால்கண்டுபிடிக்கப்பட்டது என்று நீசிந்தித்தாயா? தோழனே! மேனாட்டினர் கண்டு பிடித்து, சீர்படுத்திக் கொடுத்த உலோகத்தைத் தானே நீ சுவாமிக்கு நாணயமாக உண்டியில் போட்டு கடவுள் கடாட்சம் பெற்றதாக எக்காளமிடுகிறாய்!

சரஸ்வதி பூசையை விடாது செய்து வந்த நாம் இதுவரை, என்ன அதிசய பொருளையும், பயனுள்ள பொருளையும் கண்டு பிடித்தோம்? நாம் கண்டு பிடித்தது என்ன...ஓலைகுடிசை, கலப்பை, அரிவாள், மண்வெட்டி, மண்குடம், இரட்டைமாட்டு வண்டி...அவ்வளவுதானே?

தோழனே! சிந்தித்துப்பார். கோபப்படாதே! கொஞ்சம் நெஞ்சை உறுத்தும். மிரளாமல் யோசி. உன்னையும் அறியாமல் நீயே சிரிப்பாய்.

நம்புராணத்தில் சொல்லும் தந்தி அறியாத தசரதன், தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கேட்டறியாத திருதராஸ்டிரன், ரயில் அறியாத ராகவன், பிளாட்டிங் அறியாத பிரம்மா, சினிமா அறியாதசிவன், விஷப் புகை அறியாத விஷ்ணு ஆகிய இவர்களுக்கு, மேனாட்டினர் எந்த வகையில் தாழ்ந்தவர்களாவார்கள்.

அமரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ், இந்தியாவிற்கு வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, இந்தியாவை ஆதியில் ஜெயித்த அலக்ஸாண்டர், பகுத்தறிவுப் பாதைக்கு வழிவகுத்துக்கொடுத்த பெரியார் ஆகிய இவர்கள், எந்த வகையில்தாழ்ந்தவர்கள் ஆவார்கள் இந்தப் புராணப்புளுகுப்புண்ணிய மூர்த்திகளுக்கு மட்டும் வருடத்தில் 52-திருவிழாக்கள். அரும் பாடுபட்டுக் கண்டுபிடித்துக் கொடுத்து இன்பம் அனுபவிக்கச் செய்துகொண்டிருக்கும் அறிவாளிகளை மறந்து விடுகிறோம். தோழனே! இது முறைதானா?

பரம்பரைபரம்பரையாகச்செய்து வந்த சரஸ்வதி பூசையும், ஆயுத பூசையும் நமக்குப் பலன் தரவில்லையே, இந்தப்பூசைகளைச் செய்தறியாதவன்எவ்வளவோ அற்புதங்களை அறிவின் துணைகொண்டு கண்டுபிடித்து விட்டானே என்று யோசித்தால், முதலில் வெட்கம் பிறக்கிறது, அதைத் தாண்டினால் விவேகம் பிறக்கிறது.

என் பிரிய தோழனே! உன் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க, ஏன் விஜயதசமி நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாய். பள்ளி, அறிவு விருத்தி செய்யும் ஓர் வைத்தியசாலை. அறிவைஊட்டக் கூடவா நல்ல நாள், சரஸ்வதி பூசை பார்க்க வேண்டும். நல்ல நாள் பாராமல், கல்வி கற்கும் பிற நாட்டுக் குழந்தைகள், கல்வி கற்று வல்லமையாக அரசாட்சி செய்வதில்லையா? நல்ல நாள் கெட்ட நாள் எல்லாம் ஒரு சதிகாரக் கூட்டத்தாரின் கற்பனை. அவர்கள் தான் தங்கள் பத்திரிக்கைகளில் சரஸ்வதி பூசை—விமரிசையாக நடந்து பட்டம்மாவின் இசை ஞானமும் இனிதாக முடிந்தது. என்று எழுதுவார்கள்.

தோழனே! ஏன் மௌனமாக இருக்கிறாய்? இந்தக் கட்சிக்காரனுடன் பேசினதால் சிந்தனைக்கு வேலை கொடுக்க நேரிட்டதே என்று எண்ணுகிறாயா? இவ்வளவு ஏன்? அந்த ஆயுத பூசைக் கடவுள் சரஸ்வதி யார்? எப்படிப்பட்டவள்? ஏன் அவளுடைய சிலை, கருங்கல் ரூபத்தில் எந்தக் கோயிலிலும் இல்லை யென்றாகிலும் யோசித்தாயா?

தோழனே! வெட்கம் கெட்ட சரஸ்வதி, தன் காம இச்சை பூர்த்தியாகத்தன்னைச்சிருஷ்டித்த பிதா பிரம்மனையே புணர்ந்து அவனையே மணவாளனாக ஏற்ற வனிதை அல்லவா அவள். இதை அறிந்த நம் முன்னோர்கள் அவளின் கற்சிலையை விபசார விடுதியில்...... இல்லை, கோயிலில்வைக்க மறுத்து விட்டார்கள்.

தோழனே! இந்த ஆயுத பூசை, வியாபாரிகளுக்கும், மிஷின்காரர்களுக்கும் என்று சொல்கிறார்கள். வருஷா வருஷம் விடாமல் ஆயுத பூசை செய்யும் செட்டியாரையும், அவருடைய திருட்டுப்படியும், ஒரு நாளைக்கு அரசாங்கத்தாருக்குக் காட்டிக்கொடுக்கப்படுகிறது. வழக்கம் போல் பூசை செய்து வரும் மிஷின்களிலும், ஆள் சிக்கி இயற்கை எய்துகிறான். இது நாம் பார்க்கும் கண்கூடு.

தோழனே! இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு ஆயுத பூசையும், சரஸ்வதி பூசையும், பழக்க வழக்கமாயிற்றே என்று மழுப்பலாம். பழக்கம் என்பது தன் வாழ்நாட்களில் குறிப்பிட்ட ஒரு செயலுக்கு அடிமைப்பட்டு விடுவது. வழக்கமென்பது முன்னோர்கள் செய்து வந்தது என்ற காரணத்தால், அதனைத் தன் வாழ் நாட்களில் மேற்

ரோஜா முத்தையா

# பெரியார் பிறந்தார்!

★

"அநாத ரட்சகா, ஆபத்பாண்டவா, வைகுந்தவாசா, கைலைநாதா, கடம்பா, காருண்யவாசா, களிப்பெருங் கடலே" என்ற பஜனையிலே இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளாக ஈடுபட்டிருந்த நாடு, இன்று "சிந்தனைச் சிற்பியே, பகுத்தறிவின் ஒளியே, தமிழகம் தந்த தனிப்பெருந்தலைவ, ஈரோட்டு வள்ளலே" என்று இசைக்கிறது.

கண்ணன் காட்டிய வழியே சென்றுகொண்டிருந்த நாடு, கருத்தற்ற செய்கை என்று கண்டுகொண்டது.

பகவத் கீதையையும், பரந்தாமனின் லீலைகளையும் செப்பிடும் ஏடுகள், பழமைக்கு இட்டுச் செல்பவை, பார்ப்பனர்கள் சுக வாழ்வுக்கு வகுக்கப்பட்டவை என்பதை மக்கள் உணரலாயினர்.

பாராட்டிப் பேசுகின்ற பழமையான கூட்டமெல்லாம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியலாயிற்று.

எல்லாம் 'அவன்' செயலே என்று, பிறர் பொருளை வெல்லம்போல் அள்ளிவிழுங்கும் வீணருக்கும், காப்பார் கடவுள் உம்மை கட்டையிலே போகுமட்டும், வேப்பீர் உழைப்பீர் என உரைக்கும் வேதியருக்கும், மானிடரின் தோளின் மகத்துவத்தைக் கூறும் நிலை பிறக்கலாயிற்று.

நமஸ்காரம் வணக்கமாயிற்று. கல்யாணம் திருமணமாயிற்று.

வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா என்ற கேள்வி எழலாயிற்று.

இலையே உணவிலையே கதி இலையே எனும் எளிமை இனிமேலிலை என்ற நிலை உண்டாக்கப்படவேண்டுமென்ற முரசு எங்கணும் ஆர்ப்பரிக்கலாயிற்று.

பெண்கள் வெறும் நகைகள் மாட்டும் ஸ்டாண்டுகள் அல்ல, பேதமைக்குணம்கொண்டவர்களுமல்ல. பெண் ஊமை என்றால் ஆமை நிலைதான் ஆடவர்க்கும் ஏற்படும் என்ற புரட்சி மனப்பான்மையைப் பெண்ணினம் கொள்ளலாயிற்று.

பாடுபட்டும் பலன் காணாப் பாட்டாளி, பரமன் பேரால் இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை உணரலாயினார்ன்.

நற்றமிழில், தமிழகத்தில், நல்லெண்ணம் இல்லா நரிக்கூட்டத்தின் நச்சு மனப்பான்மையை நீக்க என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கலாயினர்.

பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே உடற்பச்சைரத்தம் பரிமாறிடுவோம் என்ற பரணி ஒலிக்கலாயிற்று.

வீழ்ச்சியுற்ற தமிழகத்திலே எழுச்சி பிறந்தது.

வளமார் எமது திராவிடம் வாழ்க வாழ்கவே என்ற கீதம் விண்ணைப் பிளக்கலாயிற்று.

இவ்வளவும் பெரியார் இராமசாமி பிறந்ததால் ஏற்பட்டது. புத்தர் சமுதாயத்திலே காணவிரும்பிய மாற்றம், பெரியார் இராமசாமி காண முடிந்தது. அசோகரால் அசைக்க முடியாத பார்ப்பனீயம் பெரியார் இராமசாமியால் ஆட்டங் கொள்ளலாயிற்று.

சமுதாயத்திலே மறுமலர்ச்சி காண விரும்பிய அத்தனை சீர்திருத்தவாதிகளும், அளவற்ற இன்னலுக்குட்பட்டனர் என்பது வரலாறு கூறும் உண்மை. கிரேக்க நாட்டு சாக்கரட்டீஸ், அடிமைத்தளையைக் களைத்தெறிந்த ஆப்ரகாம் லிங்கன், மதத்திலே மறுமலர்ச்சி கண்ட மார்ட்டின் லூதர், துருக்கியைத் திருத்திய கமால் பாக்ஷா, ரஷ்ய நாட்டு லெனின், சீனாவின் சன்யாட்சென், சிலுவையிலே அறையப்பட்ட ஏசுநாதர், மெடினாவுக்குத் துரத்தப்பட்ட முகமது நபி, கோட்ஸே முதலிய அனைவரும் தொல்லைகள் பலவற்றிற்குட்பட்டுத்தான், சமூக வாழ்க்கையைச் செப்பனிட்டனர். பெரியார் இராமசாமியும் இதற்கு விலக்கானவரல்லர். வேள்விக்கூட்டத்தாரும் விபீஷணாழ்வார்களும் அவருக்கு இழைத்த கொடுமைகள் கடுமையானவை இழித்தும் பழித்தும் எழுதிய ஏடுகள் பலப் பல. கல்லடியும் சொல்லடியும் அவர் செல்லுமிடங்களிலெல்லாம் தொடர்ந்து வந்தன. நாத்திகன், தேசத்துரோகி, வெள்ளையன் கூலி என்ற கேலிப் பேச்சுகள் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் கிளம்பின. இவ்வளவுக்கிடையேயும் அவர்தன் கருத்தைக் கூறித்தான் வந்தார்.

அந்த நாட்டிலேதான் இன்றைக்கு அவருக்கு அமோகமான வரவேற்பு. அவர் தொண்டின் பலனை மக்கள் ஒவ்வொரு துறையிலேயும் உணரவாரம்பித்தனர். ஜவுளிக்கடை முதற்கொண்டு சட்டசபை வரையில், குமரிமுதல் இமயம்வரை, பெரியார் இராமசாமியின் உருவம் இல்லாமற்போயினும் கூட, அவர் தம் கருத்து உலாவுகிறது. எழுபது வயதுப் பெரியார் இன்னும் கநடுங்காலம் வாழவேண்டுமென்று தமிழகம் வாழ்த்துப்பாடுகின்றது.

அவர் நீடூழி வாழ்க, அவர் தம் முயற்சி வெல்க.

போ. துரைசாமி.

## நடக்க இருப்பவை.

சூலூரில் 25—9—48-தேதி சனிக்கிழமை பெரியார் பிறந்த நாள் விழா நடைபெறும். ஈரோடு தோழர் பி. ஷண்முகவேலாயுதம் சொற்பொழிவு.

## கண்ணகி தோற்றம்.

திராவிடர் கழகத் தீவிரவாதியும் காரை சட்டசபை உறுப்பினருமான தோழர் ந. பாலகிருட்டினன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பா. சண்முகவடிவு அவர்களுக்கு 20—8—48ல் பிறந்த பெண் குழந்தைக்குக் கண்ணகி என்று பெயரிடப்பட்டது.

★

தோழியர்களே! இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆக்கப் பிறந்தவர்களும் பெண்கள். அழிக்கப் பிறந்தவர்களும் பெண்கள். ஹிந்தியை ஒழிக்க நாம்தான்

---

கொண்டு நடத்துவது. பழக்கத்தைச் சிறுகச் சிறுக நசுக்கலாம். வழக்கத்தை ஒரே அடியாக ஒழிக்கலாம். கள் குடிப்பது பழக்கம். கள்ளை வைத்துக் கடவுளுக்குப் பூசை செய்வது வழக்கம்.

தோழனே! அடுத்து வரும் ஆயுத பூசையையும், சரஸ்வதி பூசையையும் ஒழித்துச் சரஸ்வதிக்குச் சாவுமணி அடி!

இதைப்போன்ற அர்த்தமற்ற திருவிழாக்கள் நம் நாட்டில் நடப்பது, நம் நாட்டினர்க்கே வெட்கம்! வெட்கம்!!

## வருந்துகிறோம்.

★

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் ஜனாப் ஜின்னா அவர்கள் இந்த மாதம் 11ம் நாளிரவு மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு மிகவும் மனம் வருந்துகிறோம். அவரின் ஊக்கத்திற்கும், உயர்வுக்கும், தியாகத்திற்கும், சீரிய பண்புகளுக்கும் பின் சந்ததியாய் விளங்கும் பாகிஸ்தான், தன் இளவயதிலேயே தந்தையை இழந்ததானது பெரிதும் இரங்கத் தக்கதாகும்.

பெரும் வருவாயை உதறித்தள்ளி உண்மையாகவே பொதுநலப் பணியில் இறங்கிய ஜனாப் ஜின்னா அவர்கள், தன் வாழ்நாளிலேயே தான் பாடுபட்ட இலட்சியம் கைகூடப் பெற்றுவிட்டார். இது ஒன்றுதான் அவருடைய மறைவால் ஏற்படும் வருத்தத்திற்கு மன அமைதியை ஓரளவு தருகிறது என்றாலும், முக்கியமாக பாகிஸ்தானின் எதிர்கால நிர்மாணத் திட்டங்களை எண்ணும்போது, அவரின் பிரிவு பாகிஸ்தானிகள் அனைவருக்கும் கலக்கத்தையே உண்டு பண்ணும்.

ஜின்னாவின் பிரிவினால் பாகிஸ்தானிகள் மட்டுமல்லாமல், 9 கோடி முஸ்லிம்களுமே தமது ஒப்பற்ற பெருந்தலைவனை இழந்து வாட்டமுற்றிருக்கும் இவ்வேளையில், உலகம் கீர்த்தி வாய்ந்த ஒரு பேறறிவாளியை இழந்து விட்டதை எண்ணி, நாமும் மற்றவர்களோடு துயரத்தில் பங்கு கொள்ளுகிறோம்.

ஜின்னாவினால் பயிற்றுவிக்கப்பட்ட வீரர்கள், அவர் காட்டிய வழியைப் பின்பற்றி, நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல முறையில் தொண்டாற்றுவதே அவருக்கு அவர்கள் செய்யும் நன்றி. அவரின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய எத்தனையோ படிப்பினைகளைக் கற்று, அவ்வழி நடப்பதுதான் மக்கள் அவருக்குச் செய்யும் நன்றியும் மரியாதையுமாகும்.

# குடி அரசு

18—9—48 சனிக்கிழமை.

## மறப்போருக்காக அறப்போர் நிறுத்தம்!

—○—

"இந்திய அரசாங்கத்தாரின் படை ஹைதராபாத் சமஸ்தானத்தினுள் இந்த மாதம் 13ம் நாள் புகுந்து மறப் போரில் ஈடுபட்டிருப்பதால், நம் இந்தி எதிர்ப்பு அறப்போரை 14-உ முதல் தற்காலீகமாக நிறுத்தி யிருக்கிறேன்" என்ற பெரியார் அவர்களின் அறிக்கையை யொட்டி, இந்த மாதம் 16 ம் நாள் திருச்சியில் கூடிய நிர்வாகக் கமிட்டியும், அறப்போரைத் தற்காலீகமாக நிறுத்தி வைப்பதென்ற முடிவைச்செய்திருக்கிறது.

[illegible]

தாய் இருக்கும் என்பது யாரும் எதிர்பாராதது அல்ல. போர் தொடங்குவதற்கு முன்னாலேயே, படைத் தலைவர் பெரியாரவர்கள், குமுறிக் கொண்டிருந்த இந்தப் பிரச்சனையை எடுத்துச் சொல்லி, நாளை அறப்போர், நாளை மறுநாள் மறப் போர் என்று நேரிடுமானால், நமது கலாச்சாரப் போரைச் சிறிதுகாலம் நிறுத்தி வைக்கவேண்டியதாய் நேரிடலாம் என்று தெரிவித்திருக்கின்றார்கள்.

ஏற்கனவே தெளிவாக்கப் பட்டிருந்த இந்தச் செய்தியைத்தான்.

செய்தியைக் கேட்டவுடன், "அறப்போர் தற்காலீகமாக நிறுத்தம்" எனப் பெரியாரவர்கள் அறிக்கை வெளியிட்டு உறுதிப்படுத்தினார்கள். போர்க்களத்தில்சூடேறிவரும் இந்த வேளையில், அதாவதுபார்ப்பனீய ஆதிக்கம் தன் அழிவுக்கு அறிகுறியாக அடக்குமுறைகளை, தடியடிப்பிரயோகத்தை, கடுங்காவல் தண்டனைகளை வழங்கிவரும் இந்த வேளையில், நம் அறப்போரைத் தற்காலீகமாக நிறுத்த வேண்டி நேரிட்டிருப்பதானது, பல தோழர்களுக்குப் பெரு வருத்தத்தையுண்டுபண்ணியிருக்கும் என்பதை நாம் அறிவோம்.

அதே போல், ஹைதராபாத் பிரச்னை மறப்போராக மாறுமேயானால், அறப்போர் நிறுத்தி வைக்கப்படும் என்று பெரியார் அறிவித்ததை அவநம்பிக்கையாகக் கொண்டு, "இந்த அறப்போருக்கு எந்த விதத்தில் மாசு கற்பிக்கலாம்! அறப்போருக்குப் பின் பலம் ஹைதராபாத் பணமூட்டை என்று சொல்லச் சந்தர்ப்பம் வராதா? நாட்டைக்காட்டிக்கொடுக்கும் நய வஞ்சகர்கள் என்று சொல்லிச் சுலபமாகப் பொது மக்கள் கண்ணில் மண்ணைத் தூவலாமே!" என்றெல்லாம் எண்ணியிருந்த நரிக் கும்பல்கள் ஏமாற்றமடைந்து விட்டன என்பதையும் நாம் அறிவோம்.

நம்முடைய நோக்கமெல்லாம், நமக்கு எதிர் வரிசையில் நிற்கும் அரசாங்கம் 'முழுப்படை பலத்தோடும், நம்மை அடக்கி ஒடுக்குவதற்கான மற்ற வசதிகளோடும் இருக்கும்போது தான், நம் போராட்டம் தீவிரமாக இருக்கவேண்டும். படைபலம் குறைந்து, வசதிகள் இல்லாத நிலையில் நம் நெருக்கடியை அதிகமாக்கி, அதனால் மனமில்லாமலே கட்டாயமாக நம் எதிர்ப்புக்குக் கீழ்படியச் செய்துவிட வேண்டுமென்பது நம் விருப்பமுமல்ல, விரும்பவும் கூடாது. அறப்போர் என்பதற்கு அழகுமல்ல, அர்த்தமுமில்லை!

ஆபத்து வேளையில் தலைமாட்டில் இருந்துகொண்டே தலையில் கல்லைத்தூக்கிப் போடுவது திராவிடத்தின் பண்பல்ல. ஆங்கிலேயன் எங்கே ஒழிந்துவிடுவானோ என்று எண்ணி, அடுத்துவரவிருக்கும் ஜெர்மனியனை எப்படி வரவேற்கலாம் என்று திட்டமிட்டு, ஜெர்மன் மொழியைக் கற்றுக்

ஓ. எம். சுப்பிரமணியன்



திராவிடர்கள். மறைந்து நின்று வாலியைக் கொன்ற மாவீரன் இராமனை, வடிகட்டிய பேடி என்று வற்புறுத்திக் கூறுவோர் நாம். அப்படியிருக்க, நமது மந்திரி சபையாரின் முழுக்கவனமும் ஹைதராபாத்திலிருக்கும் வேளையில், போரில் கலப்பதுடனில்லாமல் போரில் தீர்ப்புங்கூறவேண்டிய பொது மக்கள், அடுத்தாற்போலிருக்கும் ஹைதராபாத்தினால் நமக்கு என்ன ஆபத்துண்டாகுமோ என்று அஞ்சவேண்டிய வேளையில், "வேகிற வீட்டில் (மற்றொருத்தன்) பிடுங்கினது ஆதாயம்" என்பது போல நமது இயக்கம் நடந்து கொள்ளுமென்றோ, நமது படைத்தலைவர் பெரியார் அவர்கள் அந்தப் போக்கிற்கு இடங்கொடுத்து விடுவாரென்றோ யார் தான் எதிர்பார்க்கமுடியும்? என்று கேட்கிறோம்.

ஆகவே, பெரியாரவர்கள் மிகுந்த துணிச்சலோடு, தோழர்களின் வருத்தத்தைப் பொருட்படுத்தாமல் மிக மிகப் பாராட்டத் தகுந்த முறையில் விடுத்த அறிக்கையை, கமிட்டி அங்கிகரித்து முடிவுகட்டியிருப்பதை நாம் முழுமனதுடன் வரவேற்கின்றோம். இந்த முடிவை யேற்று ஒவ்வொரு ஊரிலுள்ள தோழர்களும் இந்தி எதிர்ப்பு சம்பந்தமான எதிர்ப்பு நடவடிக்கைகளில், முக்கியமாக நேரடி நடவடிக்கை என்று சொல்லப்பட்ட மறியல், ஊர்வலம், பண்டைபுறப்படுதல், மந்திரிகளைப் பகிஷ்காரஞ் செய்தல் ஆகியவைகளை, படைத்தலைவரின் மறு உத்திரவை எதிர்பார்த்து நிறுத்தி விடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"பகிஷ்காரம் செய்வது கூடவா இந்த மறப்போரைப் பாதிக்கும்? சமாதானமாகச் சாத்வீக முறையில் தான் பகிஷ்காரத்தை நாம் செய்கிறோம் என்பதைப் பிரதமர் ரெட்டியாரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே! மற்ற மந்திரிகளின் மதியூகப் போக்கினால் தானே மதுரையும் சேலமும் நடந்திருக்கிறது? இதற்கு நாமா குற்றவாளி? போலீசார் கூடத் தேவைப்படாத நிலையில் அமைதியாக நாம் காட்டும் வெறுப்பை ஏன் நிறுத்த வேண்டும்?" இவ்வாறு நம்மில் ஒரு சிலர் எண்ணினாலும் எண்ணலாம். இது நூற்றுக்கு நூறு உண்மை. யென்

கொப்புளிக்கும் நம் அமைச்சர்கள், இன்று நடந்து கொள்ளும் அடாவடித் தனத்தினால், "இந்த இந்தி எதிர்ப்பாளர்களால் தான் நாங்கள் ஹைதராபாத்தில் கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியதாயிற்று" என்பது போலப் நாளைப் பேசும் படியான நிலைமைக் கெல்லாம் நாம் சிறிதும் இடங்கொடுக்கக் கூடாதென்பதற்கே, எதிர்ப்பு நடவடிக்கைகளில் யாதொன்றும் வேண்டாம் என மிகமிக வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"இன்று போய் நாளை வா" என்று, இராமனுக்கு இல்லாத குணத்தை—திராவிடனுக்கே உள்ள சீரியபண்பை—இராமன் மீது சுமத்தி, இராவணன் ஆயுதமிழந்த நிலையில், இராமன் இப்படிச் சொன்னான் என்பதாக, நம்மினத்தை நயவஞ்சகர்க்குக் காட்டிக் கொடுத்த கம்பன் கூறியிருப்பது போல, அதாவது ஆயுதமிழந்தவனை இன்றுபோய் நாளை வா என்று கூறும் சாதாரணத் திராவிட வீரனின் இலக்கணத்தைப்போல, நம் அறப்போருக்கு எதிர் நிற்பவர்களையும், அவர்களின் ஆயுதபலம் குறைவு ஏற்படுவதை எண்ணி "இன்று போய் (இன்றைய ஹைதராபாத் சிக்கல் தீர்ந்துபோய்) நாளைவா" (அடுத்த நம் அறப்போருக்கு தயாராய் இருப்பீர்!) என்கிற முறையிலேயே, அறப்போரின் தற்காலீக நிறுத்தம் என்பதைத் திட்டவட்டமாக மந்திரிமார்களுக்கும் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

நிறுத்தப்பட்டிருக்கும் அறப்போர் இன்றோ, நாளையோ என்று சொல்லத் தக்க விதமாய் (ஹைதராபாத் சிக்கல் எப்படியோ ஒருவகையில் தீர்ந்த பிறகு) விரைவாகவே விட்ட இடத்திலிருந்து தொடங்கப்பட்டு விடலாமென்பதோடு, அதற்கு ஆயத்தமாகவே திராவிடத்தோழர்கள் 'எப்பொழுதும் தயாராக' விளங்குகிறார்கள் என்பதையும், நாம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

ஈரோட்டு நிகழ்ச்சி :—

# நான்கு பள்ளிகளில் இந்தி எதிர்ப்பு மறியல் !

## "எங்களுக்கு இந்தி வேண்டாம்" மாணவிகள் தீர்ப்பு!

★

ஈரோடு செப். 15—

இன்று காலை 8-30 மணிக்கு தோழர் எஸ், ஆர். சந்தானம் அவர்கள் மண்டியிலிருந்து இந்தி எதிர்ப்பு ஊர்வலம் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் புறப்பட்டு பல முக்கியத் தெருக்கள் வழியாகச் சென்று கவர்மெண்டு பெண்கள் உயர் நிலைப் பள்ளியை அடைந்தது.

தோழியர் ஈ. வெ. கி. ரங்கநாயகி அம்மாள் அவர்கள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மறியல் ஆரம்பிக்கப்பட்டது.

மறியலில் கலந்து கொண்டவர்கள் :—

தோழியர்கள், ஈ. வெ. கி. ரங்கநாயகி அம்மாள், எஸ். ஜானகி ஷண்முகவேலாயுதன் (அன்புநாதன், என்ற 2-வயது குழந்தை சாமி (காணிக்கம்மாள் என்ற கைக் குழந்தையுடன்), எம். மீனாட்சி முத்து, திருமதி பழனிவேல் தனது 11-வயது குமாரத்தியுடன்.

மறியல் நடைபெறும் இடத்தில் சுமார் 2000 பேர் வந்து இருந்தனர். பள்ளிக்குச்செல்லும் மாணவிகளிடம் "இந்தி வகுப்பிற்குச் செல்லாதீர்கள்!" என்று கேட்டுக் கொண்டு துண்டுப்பிரசுரம் வழங்கினர்.

9—15 மணிக்குப் பள்ளி ஆரம்பமானவுடன் ஊர்வலமாகப் புறப்பட்டு, பன்னீர் செல்வம் பார்க் சென்று அனைவரும் கலைந்தனர்

* *

மாலை 1—30 மணிக்கு இந்தி எதிர்ப்பு தொண்டர்கள் ஊர்வலமாகப்புறப்பட்டனர். தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில், சுமார் 20 தொண்டர்கள் மஹாஜன ஹைஸ்கூல் பள்ளி முன்பு மறியல் செய்தனர். தோழர். பி. ஷண்முகவேலாயுதன் தலைமையில், சுமார் 20 தொண்டர்கள் ஜில்லா போர்டு ஹைஸ்கூல் முன்பு மறியல் செய்தனர். தோழர் ஆர். பெருமாள் தலைமையில், சுமார் 20 தொண்டர்கள் செங்குந்தர் ஹைஸ்கூல் முன்பு மறியல் செய்தனர்.

ரோஜா முத்தையா

# இதுக்குத்தானா? இவ்வளவு தடபுடல்!

"ஸ்குரு லூஸ்"

"மணி $11\frac{1}{2}$ க்கு வரவேண்டிய ரயில் இன்னும் வர வில்லையே. மணி $12\frac{1}{4}$ ஆயி விட்டதே." என்று ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் சில தோழர்கள்.

அதே நேரத்தில் 10, 12 போலீஸ் காரர்கள் துப்பாக்கியுடன் வந்து பிளாட் பாரத்தில் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். சர்க்கில் இன்ஸ் பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் அங்கும், இங்கும் நடந்த வண்ணமே இருந்தார்கள்.

ஒரு சிலர், மூன்றாவது வகுப்பு பிர யாணிகள் தங்கும் இடத்திவ் வந்து அங்கிருப்பவர்கள் ஒவ்வொருவரையும் உத்து, உத்துப் பார்த்துவந்தார்கள். அதில் ஒருவர் என்னைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சந்தேகப்பட்டு விட் டார் போலிருக்கிறது. எனக்குச் சற்று தூரத்தில் உட்கார்ந்து என்னைக் கவ னிக்காதது போலவே கவனித்துக் கொண்டிருந்தார். அதிலிருந்து ஒரு வாறு புரிந்து கொண்டேன் இந்தப் பேர்வழிகள் எல்லாம் சி. அய். டி. க் கள் என்பதாக. ஆனால் என்னை ஏன் உற்றுக்கவனிக்கிறார் என்பது விளங்க வில்லை. எதற்காக இவ்வளவு தட புடல் என்பதும் தெரியவில்லை. ஒரு சமயம் "அண்டர் கிரவுண்டில்" உள்ள கம்யூனிஸ்டுத்தோழர் யாராவது, இந்த ரயிலில் வரப்போகிறாரோ? அவரை அரஸ்டு செய்யத்தான் இத் தனை ஏற்பாடாக இருக்குமோ? அல் லது ஏதாவது பெரிய திருட்டுக் கேஸ், கொலை, கொள்ளையில் சம்பந்தப் பட்ட பேர்வழி இந்த ரயிலில் வருவ தாக அறிந்து கைப்பிடியாகப் பிடிக்க வந்து நிற்கிறார்களோ? என்றெல்லாம் நினைத்தேன். என்னால் தூங்க முடிய வில்லை. சரி, நாமும் ரயில் வருகிற வரையிலும் விழித்திருப்போமே என்ற முடிவிற்கு வந்து விட்டேன்.

நல்ல வேளையாக 10, 15 நிமிஷத் தில் ரயில் வந்து விட்டது. போலீஸ் வெகுஜரூராக இருந்தனர். வெளியிலே நின்று கொண்டிருந்த பிளசர் காரை வெளி கேட்டுக்கு வெகு பக்கமாகக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். என்னைப்போலவே பல பேர் மேற் சொன்ன நிகழ்ச்சிகளையெல்லாம் கவ னித்து வந்தனர். ஆனால் யாருக்கும் எதற்கு இவ்வளவு ஏற்பாடு என்று தெரியவில்லை. போலீசைப் போய்க் கேட்கத் தைரியமில்லை. இப்படி யாகப் பலபேர் ஓரமாக ஒதுங்கிநின்று வேடிக்கை பார்க்கக் காத்திருந்தோம்.

...டரும், சில ஜவான்களும் வந்தனர். இன்ஸ்பெக்டர் மோட்டார் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு வருகிற வரை உள்ளே தள்ளிக் கதவைச் சாத் தத் தயாராக இருந்தார்.

ஒரு ஒல்லியான உருவம், கதர் உடை. கண்ணில் கண்ணாடி. தலை வழுக்கை. ஒரு மாதிரியான பயங்கரப் பார்வை. இந்தமாதிரியான ஒரு மனி தர் வர, அதற்குப்பின்னாலும் போலீ சார் துப்பாக்கி சகிதம் வந்தனர்.

வந்த மனுஷரைப் பார்த்தவுடன் எனக்கு ஒரே சிரிப்பு. இதற்குத்தானா? இவ்வளவு தடபுடல்! என்று எண்ணி, எண்ணிச் சிரித்தேன். அப்பொழுது தான் புரிந்தது என்னை எதற்காக ஒரு சி. அய். டி கவனித்தார் என்பது.

என் பக்கத்திலிருந்தவர் ஒருவர் என்னைப்பார்த்து "இவர் யாருங்கோ? நீங்க சிரிக்கிறீங்களே. உங்களுக்குத் தெரிஞ்சவரா? கதர் போட்டுக்கொண்டு நல்ல மனுஷர் மாதிரி இருக்கிறாரே. எதுக்காகவுங்க, இவரைப் போலீசார் கைது செய்து கொண்டு போறாங்க?" என்றுகேட்டார்.

எனக்கு மேலும் சிரிப்பு! "அய்யா! இவர் ஒருமாஜிக்கைதி" என்றேன்,

"மாஜிக்கைதிக்கு இப்போ, எதுக் குங்க இத்தனை பந்தோபஸ்து. மறு படியும் ஏதாவது குற்றம் செய்து விட்டாருங்களா?" என்றார் அவர்.

"ஆமாங்க, அவர் செய்துவிட்ட குற்றத்துக்காகத்தான், அவரே இத் தனை பந்தோபஸ்துடன் வெளியில் வரவேண்டியவராகி விட்டார்" என் றேன்.

"அது என்னங்க, அவ்வளவு குற் றம்?" என்று கேட்டார்.

"அதுவா, நம் நாட்டிலே 100-க்கு 90-பேர் தற்குறிகளாளக இருப்பதை ஒழித்துக்கட்ட, உடனடியாகக் கட் டாயமாக ஏதாவது ஒரு ஏற்பாடு செய் யாமல், நம் நாட்டு மக்களை வடநாட் டான் ஆதிக்கத்துக்கு அடிமைகளாகத் தயார்ப்படுத்துவதற்கான முறையில், 10, 12, வயது பையன்களைப் பள் ளிக்கூடத்தில் இந்தியைக் கட்டாய மாகப் படிக்க வேண்டும் என்று உத்திரவு போட்டு இருக்கிற கல்வி மந்திரி அவினாசிலிங்கஞ் செட்டியார் என்பவர் இவர்தான்! அதனால் அவர் எங்கு போனாலும் கருப்புக்கொடி பிடிக்கிறார்கள். இப்போ, அவர் செய்து விட்ட குற் றத்தை உணருகிறார். ஆனாலும் என்ன செய்வது? வெளியில் வருவ...

...துடன் தான் வரவேண்டியதாய் ஏற் பட்டிருக்கிறது" என்று கூறினேன்.

அப்படிச் சொன்னதும் கேட்டுக் கொண்டிருந்தவர், நான் போட்டுக் கொண்டிருந்த கருப்பு மேல் வேட்டி யைப் பார்த்து விட்டு "ஓஹோ' நீங்க, அப்படின்னா கல்வி மந்திரிக்கு கருப் புக்கொடி பிடிக்கத்தான் வந்தீங் களா?" என்றார்.

"இல்லை, நான் $2\frac{1}{2}$ மணிக்கு வரப் போகிற ரயிலில் ஈரோடு போக வந் தேன். நானும் இந்தியை எதிர்க்கிற கட்சியைச் சேர்ந் தவன்தான். நாங்களெல்லாம் எப்பொழுதுமே கருப்புச் சட்டை, கருப்புத்துணி ஏதோ, ஒன்று போட் டுக்கொண்டிருப்பது வழக்கம்" என்று சொன்னேன். பிறகு அவர் போய் விட்டார்.

பிறகு சில தோழர்கள் எனது மேல் வேட்டி அடையாளத்தைக் கண்டு என்னிடம் வந்து மனம் விட்டுப் பேசி னார்கள். அவர்கள்தான் திருப்பூர் நகர திராவிடர் கழகத்தோழர்கள். "கல்விமந்திரியார் எங்கு போய்த்தங்கு வார் என்பது எங்களுக்குத் தெரியும். விடிந்த பிறகு காலை $8\frac{1}{2}$-மணிக்கு நாங்கள் அவருக்குக் கருப்புக்கொடி பிடிக்கப்போகிறோம்" என்றார்கள்.

அந்தப்படியே கருப்புக் கொடி பிடித்து, எதிர்ப்பைக் காட்டியிருப்ப தாக எனக்குத் தகவலும் கிடைத்தி ருக்கிறது. என்றைக்குத் தெரி யுமோ? அதுதான் 12—9—48-தேதி ஞாயிற்றுக்கிழமை.

[9ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று ஹைஸ்கூல் மறியலிலும் கலந்துகொண்ட தோழர்கள்:—

ஈ. வி. கே. சம்பத்
பி. ஷண்முக வேலாயுதம்
எஸ். ஆர். சந்தானம்
எம். கே. குகநாதன்
எஸ். அப்பாவு
என். இ. பாலகுரு
ஆர். லூர்துசாமி
சுப்பண்ணா
வெங்கிடாசலபதி
கே. எஸ். கருப்பையா
ஜி. ராமசாமி
ஈ. வி. வேணுகோபால்
எம். சின்னப்பன்
ஆர். சிங்காரம்
எஸ். மணி
ஜக்கிரியா
டி. டி. வரதராசன்
குருசாமி
எம். சுப்பய்யன்
பி. மாரிமுத்து
ஈ. எ. மதார்ஸா
ஆர். என். ரங்கராஜு
ஆர். சௌந்திர ராஜு
சுப்பராயன்
எம். பி. ராஜு

ரோஜா முத்தையா

ஜே. எஸ். செல்வராஜு
எஸ். இ. ஜி. முகமதலி
ஆர். செல்வராஜ்
ஆர். பாலசுப்ரமணியன்
எம். எஸ். ஏ. வஹாப்
ஹபிபுல்லா
எம். முத்து
சின்னச்சாமி
ஆர். மாரிமுத்து
ஈ. வி. கருப்பண்ணன்
சேதுமாதவன்

கருங்கல்பாளையம் தோழர்கள் :—
ஆறுமுகம்
ஜி. சுப்பிரமணியம்
பச்சமுத்து
பழனிவேல்

பெரியக்கிராரம் தோழர்கள்:—
ஏ. கே. அப்துல் காதர்
சி. எஸ். எம். முகமது அசேன்
ஏ. கே. ஜே. ஆபுதீன
அர்ஜுனன் பி. ஏ.
மற்றும் சில தோழர்கள்.

ஷை மூன்று ஹைஸ்கூல் மறியல் தொண்டர்களும் 2-30 மணிக்கு மேல் பல தெருக்கள் வழியாக ஊர்வலமாகச் சென்று பன்னீர் செல்வம் பார்க் சென்று கலைந்தனர்.

இன்றைய ஊர்வலம், மறியல் இவைகளினால், எங்கு பார்த்தாலும் இந்தி எதிர்ப்புப் பேச்சாகவே இருந்து வருகிறது. கவர்ன்மெண்டு பெண்கள் உயர்தரப்பள்ளி மாணவிகள் சுமார் 30க்கு மேற்பட்டவர்கள் இன்று முதல் எங்களுக்கு இந்தி வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டதாகத் தெரிகிறது! மாணவர்களும் சிலர் எழுதிக்கொடுத்திருக்கின்றனர்.

## கரூரில் அடையாள மறியல்.

கரூர் செப். 15—

இவ்வூர் உயர் நிலைப்பள்ளி முன்பு கரூர்த் தோழர் கெ. பாலையா அவர்கள் தலைமையில் 8-தொண்டர்கள் 9-15-முதல் 10-மணி வரை மறியல் செய்தனர். போலீஸ், ரிஸர்வ் படைகள் மிக ஜரூராயிருந்தன. மாணவர்கள் மிகவும் உணர்ச்சியோடு விளங்கினார்கள். பள்ளியின் முன்னாலேயே ஒன்றரை முழம் உயரத்திற்கு இந்தி ஏடுகளை அடுக்கி நெருப்பிட்ட காட்சி, மாணவர்கள் இந்தியை எப்படி வெறுக்கிறார்கள் என்பதற்கு நல்ல சாட்சி. மறியல் துவங்கியவுடன் வரிசை வரிசையாக பள்ளியிலிருந்து மாணவர்கள் வெளியேறினர். 100—க்கு 12-வீதம்தான் இன்று பள்ளிக்கு மாணவர்கள் ஆஜராயினர். மறியல் முடிந்தவுடன் ஆயிரக்கணக்கான மக்கள் பின் தொடர ஊர்வலமாக வந்து வஞ்சியம்மன் கோயில் துறையில் கூட்டம் நடந்து நன்றி கூறலுடன் முடிந்தது. மாணவத் தோழர்கள் கிருஷ்ணனும் செல்லமுத்தும் தொண்டர்களுக்கு இன்னீர் வழங்கியதும், ஆத்திர முற்ற இருகாங்கரஸ் தோழர்களை 'கெட்அவுட்' என்றுகூறி மாணவர்கள் துரத்தியதும், சப் இன்ஸ்பெக்டர் அவ்விருவரையும் வெளியேற்ற நேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

## சூலூரில் அடையாள மறியல்.

15—9—48-ஃ காலை 9-மணி முதல் 10-30-வரை போர்டு ஹைஸ்கூலின் முன் கீழ்க்கண்ட 5-தோழர்கள் (அழகப்ப எஸ். கே. கருப்பணன், ராயப்பன், எஸ். பி. சின்னையா, எஸ். பி. முத்துச்சாமி, எஸ். எம். பெருமாள்) இந்தி எதிர்ப்பு மறியலை அமைதியான முறையில் செய்தனர். இந்தி எதிர்ப்பொலிகளெழுப்பி ஊர்வலமாக வந்தபோது தோழர் எம். சுந்தசாமியால் தொண்டர்களுக்கு மாலை போடப்பட்டது. தொழிலாளத் தோழர்களால் பானங்கள் தரப்பட்டது. போலீஸ் பந்தோபஸ்து இருந்தது. மாணவர்களிடையே மிக்க பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. மறியலின்போது மாணவரொருவர் வந்து, தொண்டர்களுக்கு மாலையிட்டுப் போனது குறிப்பிடத்தக்கது.

---

[5ம்பக்கத் தொடர்ச்சி]

கரஸ்காரர்கள்! அப்படியிருக்க, இந்த மசோதா காங்கரஸ் பலத்தினால் நிறைவேறியது என்று எப்படிச் சொல்ல முடியும்? காங்கரஸ் உருவிலுள்ள சுயமரியாதை உணர்ச்சியே இந்த மசோதா நிறைவேறியதற்கு உண்மைக்காரணம். அதனால்தான் இதை நமது வெற்றி என்கிறோம்.

### பார்ப்பனர்களுக்குப் பயன்தரவே காங்கரஸ்!

காங்கரஸ் இந்த நாட்டில் உருவாகி, ஓரளவு ஆதிக்கத்திற்கு அடி எடுத்து வைக்கும் போதே, அதன் பயனையெல்லாம் அக்கிரகார வீதியில்தான் கொட்டிக் குவித்தது. இந்தப் போக்குத்தான் நாளுக்குநாள் வளர்ச்சியடையவும் ஆரம்பித்தது. இதையுணர்ந்துதான், காங்கரஸ், எப்படிப் பார்ப்பனர்களுக்கு மட்டும் பயன்படும் ஸ்தாபனமாக ஆகிவிட்டது என்பதை விளக்கி, நாட்டு மக்களுக்கு நல்லவழி காட்டுவதே இனி என்வேலை என்று கூறி, அன்று பெரியார் காங்கரசிலிருந்து விலகினார்.

இன்று காங்கரஸ் ஆட்சி நடக்கிறது. இவர்கள் கைக்கு ஆட்சி வந்தபோதே இனிப் பார்ப்பனரல்லாத எவருக்குமே துக்க காலம் தான் என்று பெரியார் கூறினார். இதை ஒப்புக் கொள்ளாதவர்களும், கண்டித்தவர்களும் இன்று கண்ணாரக்கண்டு அவதிப்பட்டு, பார்ப்பனர்களின் வளர்ச்சிப் பண்ணைதான் காங்கரஸ் என்பதை உணர்ந்திருப்பார்கள். யாருக்கேனும் அரைகுறைச் சந்தேக மிருந்தாலும், திராவிட பொது மக்களின் பெரும்பான்மைப்பட்ட கருத்தையும் முடிவையும் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, திராவிட ஜமீன்தார்களை ஒழிப்பதற்கும், பார்ப்பன ஜமீன்தார்களான இனாம்களை விலக்குவதற்கும், காங்கரஸ் மேலிடம் துணிச்சலாக வழி கூறியதையும், அந்த முடிவையே சென்னைக் காங்கரஸ் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதையும் பார்த்த பிறகு, இந்த மாகாணக் காங்கரஸ் ஆட்சியின் உண்மையோக்கியதை தெரியாமல்போகாது.

மத்திய மாகாணத்திலுள்ள காங்கரஸ் ஆட்சியாளர்கள், இன்னும் சற்று வெளிப்படையாகவே 'பார்ப்பனர்களின் நன்மைக்காகவே காங்கரஸ் ஆட்சி' என்பதைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

உலகம் புகழும் உத்தமரான, சாந்தம் தவழும் காந்தியாரைப் பார்ப்பனக் கோட்ஸே சுட்டுக் கொன்றதினாலும், அந்தச் சாவுக்குச் சந்தோஷப்பட்டுப் பல பார்ப்பனர்கள் மிட்டாய் வழங்கினதாலும், ஆத்திரங்கொண்ட பொதுமக்கள் 2, 3 மாகாணங்களில் நேரிடையாகவே பார்ப்பனர்களைத் தாக்கினர், அவர்களின் சொத்துக்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கினார்கள். இந்தப் போக்கை யாரும் ஆதரிக்கக் கூடாது என்றாலும், இந்த நாட்டுக் காங்கரஸ் நடவடிக்கைகள் பொதுமக்களுக்குக் கற்றுக் கொடுத்தது இந்தப் பயிற்சியைத்தான் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வாறு சொத்துக்களுக்கு நஷ்டத்தை யுண்டு பண்ணியதற்காக, மத்திய மாகாண சர்க்கார் அவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் கடன்கொடுக்கப் போகிறதாம். இதற்காக நாங்கள் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்கிறார்கள் மத்திய மாகாணக் காங்கரஸ் ஆட்சியார். ஆனால், "பார்ப்பனர்களுக்கு இந்த உதவி" என்பதை மட்டும் அவர்கள் குறிப்பிடவில்லை.

இதிலிருந்து என்ன தெரிகிறது? கலவரங்களினால், நாட்டுப் பிரிவினையால் சொத்துக்களை இழந்தவர்கள் எத்தனை பேர்? ஏன் காந்தியார் படுகொலையின்போதே நம நாட்டில் கூட எத்தனை பார்ப்பனரல்லாத மக்கள் சொத்துக்களை இழந்தார்கள்? அவர்களுக்கெல்லாம் செய்யாத— செய்யப்படாத உதவியை, பார்ப்பனர்களுக்கு மட்டும் செய்வானேன்? பார்ப்பனர்கள் பிறரைக் கொன்றாலும் பூஜிக்கத்தக்கவர்களே, கொன்றதை ஆதரித்துச் சந்தோஷம் கொண்டாடினாலும் அவர்கள் பூஜிக்க தக்கவர்களே என்கிற போக்கைத்தானே காங்கரஸ் ஆட்சி மேற்கொண்டிருக்கிறது என்று கூறினால் அது எப்படித்தவறாகும்?

### சேலத்திற்கு பிரைஸ்!

வடநாட்டு ஆதிக்கத்தை நிலை

காட்டி ஆணி அடிப்பதற்காக, வட நாட்டு அடிமை விரும்பிகளால் புகுத்தப் பட்டிருக்கும் கட்டாய இந்தியை எதிர்ப்பதிலே சேலம் முதல் பிரைஸ் அடித்துவிட்டது. இதைக்கண்டு மற்ற ஒவ்வொரு ஊர்க்காரர்களும் பொறாமைப்படத்தான் வேண்டும்.

ஆச்சாரியார் பவனியின்போது சென்னையில் கைதான தோழர்களில், சேலம் வட்டாரத்தைச் சேர்ந்த 18-தோழர்கள் இருந்தார்களே அதைக் கூட இங்கு குறிப்பிடவில்லை. அவினாசியார் பவனியின்போது சேலத்தில் செங்குருதி சிந்திய திராவிட இளங் காளைகளைக் கண்டுதான், சேலத்திற்கு முதல் பிரைஸ் என்கிறோம்.

"இப்போதைய இந்தி எதிர்ப்பிலே சிறை செல்லுவது என்பது முக்கியமல்ல. இனி வரும் காலத்தில், சிறை சென்றதற்காகவும் அப்படி ஒரு மதிப்பு, செல்வாக்கு இருக்க முடியாது. ஜீவகாருண்யமற்ற பார்ப்பன ஆதிக்க ஆட்சியில் நம்முடைய எதிர்ப்பு நடைபெறவேண்டுமென்றால் நம்மில் பலர் தடியடிக்காளாக வேண்டும். கால் கை இழக்கவேண்டும். முந்திய போரில் 2-பேர் இறந்தார்கள் என்றால், இப்போது எத்தனையோ பேர் வெளியிலேயே சாகவேண்டியதாய்த் தானிருக்கும்" இவை இப்போதைய இந்தி எதிர்ப்பு அறப்போருக்கு முன்னால் அய்யா அவர்கள் கூறியதின் சாரம்:—

ஓமந்தூராரின் போலீஸ் இலாகா, இந்தக் காட்சியை அவ்வளவு பெரியதாகச் சென்னையில் காட்டவில்லை. ஒரு வேளை உலகத்தாரின் பார்வைக்குப் பயப்படவேண்டும் என்கிற பொது நீதியை ஒட்டியதாகவும் இருக்கலாம். ஆனால் சென்னை தவிர மற்ற இடங்களில் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம், போலீஸ் இலாகாவே மற்ற இடங்களுக்கு இப்படி உத்திரவு போட்டிருக்கவேண்டும் அல்லது போலீஸ் இலாகாவில் புகுந்திருக்கும் டவாலிகள், அங்கங்கே தங்களுடைய சுய ரூபத்தைக் காட்டுவதாயிருக்க வேண்டும். எப்படியோ சென்னையில் நடத்தாத காட்சியை-திருச்சி, சேலம் மதுரைபோன்ற ஊர்களில் போலீஸார் நடத்தியிருக்கிறார்கள்.

மக்கள் ஆட்சியில், மக்களின் மனதிற்கு வெறுப்பை விளைவிக்கும் காரியத்தை ஆளவந்தார் செய்தால், தங்களுடைய வெறுப்பை நாகரீகமான முறையில் மக்கள் தெரிவிக்கவேண்டுமென்றால், அதற்கு வழி என்ன? கருப்புக் கொடி காட்டுவது தான் நாகரீகமான முறை என்று நாகரீக சர்க்கார்கள் அங்கீகரித்திருக்கிறது. ராமராஜ்ய சர்க்கார் அது கூடாதென்றால் அதற்கு வேறு வழி ஏதாவது கூறவேண்டாமா? அவர்கள் எந்த ரயிலில் வருகிறார்கள் என்பதைத் தெரிந்து, முன்பு அவர்கள் செய்ததைப்போல தண்டவாளத்தைப் பெயர்க்க வேண்டுமென்கிறார்களா? வழியில் வெடிகுண்டு வைக்க வேண்டுமென்கிறார்களா? போஸ்டாபீஸ்களைப் பொசுக்கவேண்டுமென்கிறார்களா? கோர்ட்டுகளைக் கொளுத்த வேண்டுமென்கிறார்களா? இந்த மாதிரிச் செயல்களைச் செய்தால் தான் வெறுப்பைக் காட்டுவதாகுமா? இந்த முறைகளை மந்திரிமார்கள் விரும்பலாம். ஆனால் மனித உணர்ச்சியை மதிக்கும் திராவிடர்கழகம், தன் மண்டையைப் போட்டாலும் இந்தக் காரியங்களைச் செய்யாது. இதை நன்றாகத் தெரிந்து கொண்ட காரணத்தினால் தான், சமாதான முறையில், சாத்வீகமாகக் கருப்புக்கொடி காட்டுபவர்களையெல்லாம் போலீசாரைக் கொண்டு அடித்தும், உடைகளைக் கிழித்தும், தடியால் தாக்கியும், துப்பாக்கி முனையால் குத்தச் செய்தும் பயங்கர அக்கிரமமான முறைகளை, சில பொறுப்பற்ற மந்திரிமார்கள் கொடிய மிருகங்களோடு போட்டி போட்டுக் கொண்டு கையாள அனுமதிக்கிறார்கள் போலும்.

வருகிறேன் என்று அறிவித்து வராமல் பதுங்கிக்கொண்ட மந்திரியின் நடத்தையை எதிர்பார்க்காமல், திருச்சியிலுள்ள தோழர்கள் மந்திரியைப் பகிஷ்கரிக்க கருப்புக்கொடி காட்டத் தயாராயிருந்தனர். இக்கூட்டம் தடியடிப் பிரயோகத்தால் கலைக்கப்பட்டது என்கிற செய்தியையும், இது காமராஜரின் கயவாளித் தனத்தால் நடந்தது என்பதையும் இந்நாட்டு மக்கள் அறிவார்கள்.

இந்த மாதம் 11ல் இந்தி மந்திரி அவினாசியார் சேலத்திற்கு வந்த போது திராவிடப் பொது மக்கள் தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். 12ல் பக்தவத்சலம் கனமும் மாதவமேனன் கனமும் மதுரைக்கு வந்த போதும், மக்கள் தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுபோல இந்தி எதிர்ப்பு ஆரம்பித்த பிறகு, கருப்பு கொடி காட்டுவது என்ற திட்டத்தின்படி சுமார் 50-இடங்களில் நடந்திருந்தாலும், போலீசாரின் பார்ப்பனீயச் செயல் மதுரையிலும், சேலத்திலும் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிகமாக நர்த்தனமாடியிருக்கிறது.

மதுரையில் மூன்று தோழர்களுக்கு பலமான தடியடி. கருப்புக்கொடியை தராமலிருந்த மற்றொரு தொண்டருக்குப் பெருத்த அடி. மக்கள் கூட்டத்தை ஜீப் கார்களை ஓட்டி போலீசார் விரட்டினர். இருந்தாலும் கருப்புக் கொடி காட்டுவது வெற்றிகரமாக நடந்து முடிந்தது. 15-பேர் கைது. 15-பேருக்கும் ஒரு வாரச் சிறைத் தண்டனை என்று மதுரைச் செய்தி கூறுகிறது.

சேலத்தில் 40, 50, 20-ஆக 110-பேர் மூன்று இடங்களில், மூன்று நேரத்தில் கைதாக்கப்பட்டிருக்கின்றனர். ரோடுகளில் அரை மைல், ஒரு மைல் தூரத்திற்கு வேறு எவரின் நடமாட்டமும் இல்லாதபடி போலீஸ் பாதுகாப்பு. 500-மேற்பட்ட கருப்புக்கொடிகள், போதாதற்குப் புறாக்களும் கருங்கொடி வீசிப்பறந்தன. 5000-ம் பேர் கொண்ட கூட்டம் தடியடிக்கு இரை. பல தோழர்களை மூர்ச்சையடைந்து கீழே விழுமட்டும் போலீசார் அடித்தனர். துப்பாக்கியால் சுடுவோம் என்று பயமுறுத்தினர். இவ்வளவும் அவினாசியார் முன்னிலையில் நடந்தன. இவ்வாறு சேலம் செய்தி.

நியாயமான முறையில் எங்களுடைய வெறுப்பைக் காட்டியதற்கு, இப்படி அடித்துப்போடுவதுதான் ஜனநாயகமா? என்று ஒரு தோழர் இந்தி மந்திரியைக் கேட்டிருக்கிறார். இதற்கு அவினாசியார் 'அடிக்காமல் வேறு என்ன செய்வார்கள்' என்று மிகக் கோபமாகப் பதில் கூறியிருக்கிறார்.

இது பிரம்மச்சாரிக் குறும்பா? சிறுபிள்ளைத் தனமான யோக்கியப் பொறுப்பற்ற பேச்சா? இல்லை, பொறுப்பான மந்திரிக்கு இது அழகா? அவினாசியாரைப் பொறுத்த வரையிலும், அவரின் குற்றங்களை அவருக்கெடுத்துக் காட்டப்படும் பொழுதெல்லாம், "மூக்கறுபட்ட அவஸ்தை பொறுக்காமல் கத்தும் கதறலைப்போலவே" பல இடங்களில் அர்த்தமில்லாமல் உளறிவிட்டு, பின் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கின்றார் என்றாலும், அடிபட்டதைக் காட்டிக் கேட்டபோது கொஞ்சமும் கண்ணியமின்றி இவ்வாறு பதில் கூறினார் என்றால், இராமகிருஷ்ண மடப்போக்கு இவருக்கு இந்த முரட்டுக் காலித்தனத்தை உண்டாக்கியதா? என்று அவரையே கேட்க வேண்டியதாயிருக்கிறது.

இந்த மாதிரி காலித்தனமான பேச்சு, அவினாசியாருக்கே 'காப்பிரைட்' ஆக இருக்கட்டும் என்று, கண்ணியமான முறையில் நடந்து போலீசாரின் தடியடிக்குஆளான, சேலத்தின் இளஞ்சிங்கங்களையும், மண்டையுடைந்தாலும் எங்கள் வெறுப்பைக் காட்டியே தீருவோம் என்று காட்டிய மதுரைத் தோழர்களையும் பாராட்டுகிறோம். நீங்கள் சிந்திய குருதி வீணாகுமாறு விட்டு விடும் வீணர்கள் அல்ல மற்ற திராவிடர்கள் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

தாய்மார்களும் போராட்டத்திற்குத் தயாராகவேண்டும். என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட்டத்தில் வெற்றி பெறவேண்டும். இது கடைசிப்போராட்டம். ஆகவே வெற்றி அல்லது தோல்வி. இரண்டிலொன்று பார்த்துவிடத் தான் வேண்டும். பெரியார்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கழுத்தருகில் சென்றன...குழந்தை அசைந்தது...

சாகும் நிலையிலே இருக்கும் மனிதன் துடிப்புடன் எழுவது போல, எண்ணை அற்றுவிடும் போழ்திலே அகல் விளக்கு அகண்ட ஒளியுடன் எரிவது போல, மடமையிலே மக்கி மனம் மடியும் மனிதன் உள்ளத்தில் கூட ஒரு மின்னல்; அறிவின் கீற்று...

எங்கெங்கோ இருக்கின்ற வெள்ளிகளின் நிலையினால், மண்ணில் மனிதர்களின் வாழ்வு நடைபெறுவது என்பது நடக்கக்கூடிய காரியமா?......... நட்சத்திரங்களுக்கும்-பிறக்கும் குழந்தைகளுக்கும், மேலே எறியப்பட்ட பொருளுக்கும்—பூமிக்கும் இடையேயுள்ள இழுக்கும் சக்தியைப் போன்ற ஒரு தொடர்பு உண்டு என்பது உண்மையானால், எரிகின்ற மின் விளக்குகளுக்கும்—பிறக்கும் குழந்தைகளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு உண்டா?...

மனிதனுக்குச் சாவு சில நட்சத்திரங்களின் தொடர்பால் தான் ஏற்படுகின்றது என்பது உண்மையானால், அணுக்குண்டால் அழிக்கப்பட்ட 'ஹிரோஷிமா' வில் வாழ்ந்த அனைவருக்கும், அணுக்குண்டு போடப்படும் நேரத்திலே சாவு நட்சத்திரங்கள் ஒன்றி இருந்தனவா?...... நகரங்கள் அழிந்துபட்டனவே, அவைகளுக்கும் நட்சத்திரங்களுக்கும் தொடர்பு உண்டா?.........

அறிவின் கீற்று அழிந்தது...ஆத்திரத்தின் அவாவினால்.........

குழந்தையைத் தொட்டதும் ஏற்பட்ட அசைவினால் தாய் விழித்துக் கொண்டாள்...கொடிய நோக்கத்தைக் கொண்ட காதலனின் காதக உருவத்தின் நிலையைக் கண்டாள்....

எழ முடியாத அந்நிலையில் அத்தாயுள்ளத்தில் ஊறிய வெறி... கையைத் தள்ளிவிட்டுக் கனிவுடன் சிசுவை அணைத்துக்கொள்ளச் செய்தது...திடுக்கிட்ட சிசு சத்தமிட்டது....

ஏமாற்றத்தால் ஏற்பட்ட வெறுப்பு முகத்தில் கொப்பளிக்க எதிரே நிற்கும் கொலைஞன்...

அமைதியைக் கிழிக்கும் அத்தாயின் குரல்...

"என்ன வேலை..."

"எல்லாம் நல்ல வேலைதான்...அச்சிசுவை என்னிடம் தா..." அடிபட்ட சிங்கத்தின் சீற்றத்தை யொத்துச் சிதறின வார்த்தைகள்...

"முடியாது...முடியவேமுடியாது... எவனோ சொல்லியதைக் கேட்டு என் குழந்தையைக் கொல்லக்கூடத் துணிந்துவிட்டாயா பாவி..." காதலனே என்று கனிமொழி பேசிக்கட்டியணைத்த உடலினைக் கொண்ட காரிகைதான் இத்தகைய கடுமொழி புகன்றாள்...

"உன் குழந்தையா...சரி...நான் வேண்டுமா...அக் குழந்தை வேண்டுமா..."

"................"

"பதிவிரதை போல் நடித்துப் பாசமொழி பேசி என்னை நாசத்தில் சிக்க வைக்கும் வேசி தான் நீ...உன் வாய் ஏன் திறக்கவில்லை...நான் இறந்தபின் உனக்கு மணவாளன் கிடைப்பான் என்றுதானே மனம் விட்டுச் சொல்லாமலே சிசுதான் வேண்டும் என்கின்றாய்......நீயாகத் தருகின்றாயா...நான்...

"குழந்தையையா...என் உடலைப் பிணமாகக் கண்டாலொழிய குழந்தையைத்தொட முடியாது......"

"முடியாதா..."

"ம்...அய்யோ......" உயிர் ஒடுங்கிய நிலையிலே படுக்கையில் விழுந்தது பாச மனைவியின் உடல்...... தாயுடன் சேயும் சென்றது......

* *

நீதிபதியவர்களே...இனிக் கூறுங்கள் உங்கள் தீர்ப்பை......என் பாச மனைவியை, நேசக்குழவியைக் கொன்றேன்...ஆனால் கொல்லச்செய்தது... எது என்று சிந்தித்து முடிவு சொல்லுங்கள்...

நான் குற்றவாளியா? நாடு நலம் கெட, நல்லோர் நலிய, மாற்றார் மலிய, மனத்தை மாய்த்து, உள்ளத்தை உருக்குலைத்து, சிந்தனையைச் சிதைத்து, அறிவின் அடித்தலத்தையே அகற்றிவிட்டு, அன்பைஅறுத்தெறிந்து அழிவுக்கு வழியைக்காட்டி, மடமைக்கு மனத்தைச் செலுத்தி மக்களை மண்ணோடு மண்ணாய் மக்கச் செய்யும் மூடப்பழக்கமா?...

என் மனைவியை, என் குழந்தையைக் கொன்றது நானா...அந்தக் குறியுரைப்போனா...

குறியுரைப்போனின் கோள் சொல்லைக் கேட்காமலிருந்தால், குழந்தையுடனும் மனைவியுடனும் குலவிக், குதூகலத்தில் குளித்து இன்பமுடன் இருப்பேனன்றோ...

ஆம் குறியுரைப்போனின் சொல் உண்மைதான் போலும்... அக்குழந்தை பிறந்த நேரத்தின் கோளாறினால் தான் அனைவரும் அழிந்து விட்ட நிலைக்கு வந்து விட்டோமோ என்னவோ?...

ஆனால்... நீதிபதியவர்களே... மலர்ந்த முகத்துடன் தூக்கு மேடை ஏறுகின்றேன், தூய உள்ளம் படைத்த என் துணைவியை அடையும் பொருட்டு... இன்ப இதயத்துடன் தூக்குக் கயிற்றை முத்தமிடுகின்றேன் என் இன்பக் கனியைக் காணும் விருப்பத்துடன்... ஆனால் இனிமேலாவது இம் மண்ணில் யாரும் என்னைப் போல இழி நிலையடைய நேரிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்......உங்கள் நீதியின் பேரால்...யார் குற்றவாளி... சிந்தியுங்கள் சிறிது......யார் குற்றவாளி...

* *

மண்ணுடன் மண்ணாய் மக்கிக்கிடந்து மடமையிடையே ஊடாடித் திரியும் மக்களின் மனக்கண்ணைத் திறந்த தியாகியாகுற்றவாளி..அறிவொளியை அனைத்துலகும் பரப்ப, அருங்கருத்துகளை அறிவித்த அருந்தமிழனா குற்றவாளி...—பக்கத்திலே உட்கார்ந்திருந்த என் நண்பர் தூங்கியிருந்த என்னைத்தட்டி எழுப்பி, "என்னப்பா! கனவு ஏதும் கண்டாயா...குற்றவாளியா...தியாகி...என்று பிதற்றுகிறாயே என்ன காரணம்" என்றார்...

என்மேல் கிடந்த தினப்பத்திரிகையை எடுத்து அவரிடம் கொடுத்து மையினால் குறியிடப்பட்ட செய்தியைப் படிக்கச் சொன்னேன். நண்பர் படித்தார்...

* *

"ஒருவன் தனக்குப் பிறந்த குழந்தையின் உயிரைக் கொள்ளை கொண்டான்—ஜோதிஷன் ஒருவன் அக் குழந்தை பிறந்த நேரம் நல்ல நேரமில்லை என்றும், அக்குழந்தை பிறந்த மூன்று மாதத்துள் தகப்பன் இறப்பான் என்றும் சொல்லியதாகத் தெரிகிறது.

## திண்டுக்கல் திராவிட மாணவர் கழகம்

5—9—48ல், திண்டுக்கல் கோட்டையில் மாணவர் திராவிடர் கழகத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் மா. தங்கவேலர் தலைமை தாங்கினார்.

திருச்செங்கோட்டில்.
குடி அரசு கிடைக்குமிடம்.
N. P. சதாசிவம்.
ஜவுளிக்கடை.

## புதிய பதிப்பு
விற்பனைக்குத் தயார்!
★
1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0
5. திராவிடர்—ஆரியர் உண்மை 0—2—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

# அறப்போர் இந்தி!

[★]

"பகுத்தறிவு வழியிலே சென்று, புரட்சி யென்னும் குன்றின்மேல் நின்று, மறுமலர்ச்சி யென்னும் மதிப்பற்ற செல்வத்தை மக்களுக்கு, மாநிலத்திற்கு மகிழ்ச்சியாய் எடுத்துக் காட்டிக் கொடு'' என்று அன்றோர் 25-ஆண்டுகளுக்கு முன் அறிவுரை பகர்ந்து, தொண்டாற்றி வரும் பெரியார் பிறந்த திராவிடநாட்டில் பிறந்த பெருமக்களே! வளையாத உள்ளமும், உடலும் படைத்த வாலிபத்தோழர்களே! கண்ணகி, மணிமேகலை, இளங்கோ வேண்மாள், அமுதமொழி அவ்வை, மூடமோசியார் வழியில் தோன்றிய வீரவிளைவுகளாய வீராங்கனைகளே! உங்கள் அனைவருக்கும் ஒரு அறிவிப்பு, வேண்டுகோள், அறிவுரை.

நாம் யார்?... அவனியில் ஆதியில் உதித்ததும், இசையில் ஈடின்றி மிளிர்ந்ததும், எத்திசையிலும் ஏற்றங் கொண்டதும், பாவலர் நாவலர் பல்லாயிரவரைப் படைத்தளித்ததும், மாற்றுமொழிகளின் நெருக்கலினாலும் மறைந்தொழியாது நிற்பதுமான தமிழ் மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டோம். அம்மொழி வழங்கும் நாட்டில் வாழ்கிறோம். ஒள்ளிய தெள்ளமுதான அம் மொழியைச் சில கள்ள உள்ளங்கொண்டோர் நசுக்கிப் பொசுக்க, அழித்து ஒழிக்க மறைமுகமாய் முன்வந்துள்ள நெருக்கடியான இந்நேரத்தில், உங்கள் முன் ஒரு சில முக்கிய சொற்கள் கூறத் துணிகின்றேன். செவி சாய்ப்பீர்.

தமிழ் வளர்க்க விரும்பும் பெரியார்கள் சிலர் (சில கனமான அமைச்சர்கள். அப்படி அவர்கள் மட்டும்தான் எண்ணுகின்றனர்) நம் தமிழை ஒரு புது முறையில் வளர்க்கத் திட்டமிட்டிருக்கின்றனர். அம்முறை, புன்மை இந்தியும் (நம் முடிந்த முடிவுப்படி அவர்கள் உணர்ந்திருந்தும் அப்படிச் சொல்லிக் கொள்ள மாட்டார்கள்) பொன் தமிழ் நாட்டில் நன்மைத் தமிழுடன் வளரும், உலவும் முறையேயாகும். என்ன பொன்னான பொருட்செறிவுள்ள, புதுமுறை! இது எவ்வளவுதூரம் சிறிதும் மெய்கலவாத முழுப்பொய்யான அரசியல் திட்டம் என்று இப்பொழுது நாம் கூறத் தேவையில்லை. சில அரசியல் பொம்மைகள் (வடநாட்டாரின் சூத்திரக் கயிற்றின் இழுப்பு விசையினால் இயக்கப்படுவன) கூறுகின்றன இந்தி மிக அவசியம் என்றும்; இந்தியால் தமிழ் கெடாதென்றும்! இதைக் கேட்டு நீங்களோ நானோ வெட்கப்படத் தேவையில்லை, நாம் கூறும் இவ்விரண்டும் முழுத் தவறு என்பதை யறியாது, இந்த உயர்ந்த, பொறுப்பான அமைச்சர் பதவியில் இருக்கின்றோமே என்று அவர்கள் நாணப்படல் வேண்டும்; அதுதான் முறை.

பொதுமொழியாம் இந்தி! திரு. வி. க. அவர்கள் கூறியதுபோல் "மனிதனை மந்தியாக்கும் மாண்புள்ள" இந்தி மொழி இந்நாட்டுக்குத் தேசிய மொழியாம்! அரசியல் மொழியாம்!! பொது மொழியாம்!!! "பொது மொழி" என்றால்,-"பொது மொழி" என்ற சொல் "உலக முழுமைக்கும்" பொருந்தும் பொருளில் வழங்குவதுதான் தகுதியுடையதே தவிர, இந்த விசித்திர வீரர்கள், பொருளறியாத பெரியோர்கள் கூறும் முறையில் இவர்களுடைய 'இராமராச்சியம்' நடக்கும், 20-ம் நூற்றாண்டின் அயோத்திமாநகரமான இந்திய ஆட்சிப் பரப்பிற்கு மட்டும் என்று கொள்வது முறையாகுமா? தேவையானதா?

பொது மொழியாகப் போகும் இந்தியைத் தனியாக, விரைவில் வேலைக்குப் போகவிருக்கும் இளைஞர்கள் மட்டும் கற்கும் வகையில் தனிச் சிறப்புடன் திட்டம் அமைத்திருக்கிறாரா? இல்லை. இந்தியும் கன்னடம், வடமொழி, அரபு, உருது, பிரஞ்சு போன்றவற்றுள் ஒன்றுதானே தவிர, தனிச்சிறப்பு கிடையாது. அவினாசியார் இந்தி மொழியை "3 பிடித்து எண்ணும் முறை" யில்தான் மதித்திருக்கிறார். "பம்பாய் சென்டினல்" எழுதியது போல, பெரியார் அவர்களுக்கும், அவர் கட்சிக்கும் பயந்து, தங்கட்கெல்லாம் குருநாதர், வழிகாட்டியான ஆச்சாரியார் 10 ஆண்டுகட்கு முன் அடைந்த தோல்வியை எண்ணி, இந்தியை தனிச்சிறப்பில்லாமல் செய்தார். இது தேசிய மொழிக்கு அவர்செய்த பெருந்துரோகமாகும். "இந்திபடித்தவனுக்குத்தான் வேலை" "இந்தி கட்டாயமில்லை" இந்தி தேசிய மொழி" இவை ஒவ்வொன்றும் எவ்வளவு தூரம் முன்னுக்குப் பின் முரணான உத்தரவுகளென்று சிந்தியுங்கள்.

இவற்றைச்சிந்திக்காமல் ஏன் அவினாசியார் தவறி நடந்தார்? சிந்திக்கு முன் வடநாட்டிலிருந்து செய்திவந்து டெலிபோன் மணி அடித்ததா? பெருமை மிக்க அமைச்சரைப் பேட்டி காண யாராவது எதில்லார் கூட்டம் வந்து விட்டதா? அன்றி "எந்தக் காரியமும் பின், என் சொந்தக் காரியந் தான் முன்" என்று ஏதாவது சொந்தக்காரியத்தில் கவனஞ் செலுத்தியிருந்தாரா? இதைக் கேட்கத்தான், அவர் செய்த பெருந்துரோகத்தை எதிர்த்துத்தான் நியாயத்திற்குக்கட்டுப்பட்டு, நேர்மைக்குட்பட்டு, நெஞ்சுரைக்கும் உரிமையைப் பெறப் பாடுபட்டு வரும் நாம் தான், தொடங்கிவிட்டோம் அறப் போர் 10 தேதி முதல்?

இந்திப் பாம்பைத் தமிழ்ச் சோலையில் நுழைய விடு முன் காவலாளி அவினாசியார் என்னசெய்திருக்கவேண்டும்? அனுபவமில்லாத அவர், முறைப்படி நடக்க விரும்பும் காவலாளியானால் பாம்பைத் தோட்டத்தினுள் புக விடுவது தவறு என்பதை அறிந்திருந்தும், புக விட்டால் அது அச் சோலையில் இருந்து கொண்டே ஒரு நாள் தன்னையே தீண்டி மாண்டுவிடச்செய்யும் என்று அறிந்திருந்தும், புகும் பாம்பை அடித்துக் கொல்ல வன்மையும், துணிவும் இல்லாத அவர் என்ன செய்திருக்க வேண்டும்? சோலையினுள் மாலையில் இன்புற்றிருக்கும் தமிழ்க் கடல் மறைமலையடிகளார், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், நாவலர் பாரதியார், திராவிடத்தந்தை, மூதறிஞர் பெரியார் இவர்களிடம் ஓடி வந்து உண்மையைக் கூறியிருந்தால், அவர்கள் ஆற்றல் இல்லாத தோட்டக் காவலாளியான (வடநாட்டு அடிமை) அவர் மேல் இரக்கங்கொண்டும், தாம் இருக்கும் சோலை வீணாகுமென்பதுமறிந்து அந்நச்சரவு இந்தியை ஒழித்துக் கட்டி யிருப்பார்களே! சேதுப் பிள்ளையைக் கேட்கவில்லை; சென்னை மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தைக் கேட்கவில்லை, அருணகிரி நாதரைக் கேட்க வில்லை; அண்ணாத்துரையைக் கேட்கவில்லை. தர்மாம்பாளைக் கேட்கவில்லை, 'தார்மீக இந்து'வைக் கட்டாயம் கேட்டிருப்பார். செய்து முடித்து விட்டார்.

எதிர்த்துப் போர் தொடுத்து விட்டோம் "அறப் போர்" அதன் பேர்! நடத்துவார்யார்? மறத்தமிழர்! இந்திக்கு இடங்கொடார். தொண்டில் இறங்கி விட்டோம். துணிந்து விட்டோம் எதற்கும்.

திகழ்புகழ் குறையா திராவிடப் பெருமக்களே! இளைஞர்களே!!

அறப்போருக்கு ஆவன புரிய முன் வாருங்கள். நம் நாடு வீரத்திற்கும் பெயர் பெற்ற நாடு. தன் ஒரே மகனைப் போருக்கனுப்பிய மறத்தமிழ் மாது வாழ்ந்த நாடு! 'வண்டமர்க் குடைந்தனனாயின் உண்டவென் முலையறுத்திடுவன் யான்' என்று சூள் உரைத்த வீர முதுமகள் வாழ்ந்த நாடு. கனகவிசயரை வென்று கல் சுமந்து கொண்டு வந்த சேரன் செங்குட்டுவன் வாழ்ந்த நாடு. வ. உ. சிதம்பரனாரின் மனைவியார், திருப்பூர் குமரனின் தாய், தாலமுத்து, நடராசர்களின் தாய்மார், மனைவியார்,

# ராஜாஜி பேசுகிறார்!

★

ஆரியம்வேறு, திராவிடம்வேறு; வடநாடு வேறு, தென்னாடுவேறு; வடநாட்டு கலாச்சாரத்திற்கு முற்றிலும் முரண்பட்டது தென்னாட்டு கலாச்சாரம்; ஆகையால் அவர்களுடன் ஒன்றியைந்து வாழ முடியாது என்று, இப்பொழுது நேற்றல்ல, இருபது ஆண்டுகளாக பேசியும் எழுதியும் வருகிறோம். இவ்வாறு கூறுபவர்கள் வகுப்பு வாதிகள், ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவர்கள், பாரதமாதா வைத்துண்டிப்பவர்கள், வெள்ளையனின் கூலிகள் என, காங்கரஸ் திராவிடர்கள் கண்டித்தனரே ஒழிய, அவர்கள் கூறுவதிலே ஏதாவது பொருள் இருக்கிறதா வென சிந்தித்தார்களில்லை. வட துருவத்தையும், தென்துருவத்தையும் எப்பொழுதுமே இணைக்க முடியாதென்று சரித்திர ஆதாரங்களை எடுத்துக்காட்டிவாதாடியபோதெல்லாம், வகுப்புவாதிகள் என்று மட்டும் கூறினார்களேயல்லாது, அவ்வாறு அவர்கள் கூறும் காரணமென்ன என்று எண்ணினார்களில்லை. மீண்டும் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்பதற்காக, கனம் ஆச்சாரியார், திருவனந்தபுரம் கார்ப்பரேஷன் நிலையத்தில் பேசின பேச்சின் ஒரு பகுதியை அப்படியே கீழே தருகிறேன்.

"நான் டெல்லிக்குச் செல்ல வேண்டுமென்றும், அங்கு துக்கத்திலும் ஏமாற்றத்திலும் கோபத்திலும் காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும் இருந்தது. சிறிது மன அமைதி பெறுவதற்காகவே, அன்பும் ஆதரவும் நிறைந்த சூழ்நிலையில் இருப்பதற்காகவே நான் இங்கு (தென்னாடு) வந்திருக்கிறேன்''

இரண்டு மூன்று வரிகளிலேயே ஆச்சாரியார் வடநாடு—தென்னாடு வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். துக்கம், ஏமாற்றம், கோபம் இம்மூன்றும் நிறைந்தது வடநாடு; அமைதி, அன்பு, ஆதரவு இவைகள் நிறைந்தது தென்னாடு. அப்பப்பா! எவ்வளவு நேர்மாறானவேற்றுமை! இதையே நாம் கூறியதற்காக இழித்தும் பழித்தும் பேசப்பட்டோம், அதையே கண்கூடாகக் கண்ட ஆச்சாரியார் தென்னாட்டு மக்களிடம் கூறி ஆறுதல் பெறுகிறார். ஆனால், அவர் கவர்னர் ஜெனரல், நாமோ வகுப்புவாதிகள்!

டெல்லி, ஏமாற்றம் கோபம் துக்கம் கொண்டது என்று, வங்காளத்தையும் நவகாளியையும் எடுத்துக்காட்டி கூற வில்லை. அசோகன் காலமுதற் கொண்டு ஔரங்கசீப் காலம் வரை அமைதியற்ற முறையிலேயே டெல்லி இருந்து வந்திருக்கிறதென வரலாறு, புதைபொருள், ஆராய்ச்சி, கல் வெட்டுகள் முதலிய சான்றுகளுடன் விளக்கிக் கூறி வந்திருக்கிறோம். அவற்றையே இன்று ஆச்சாரியார் மூன்று சொற்களிலே விரிவாகக் கூறுகிறார். ஆனால் அவர் அறிவாளி, தேசபக்தர்; நாம் நாத்தீகர்கள், தேசத்துரோகிகள்!

ஆச்சாரியார் பேச்சிலே, செறிந்த கருத்துக்கள் பொதிந்துள்ளதை, கருத்தூன்றிப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். வடநாட்டிலே ஆச்சாரியாருக்கு முழு ஆதரவு இல்லை யென்று, அவர் பேச்சு நமக்கு எடுத்துக் கூறுகிறது. களிப்பற்ற நிலையிலே கவர்னர்ஜெனரல் பதவியை வகிக்கிறார். யாராலோ எதற்காகவோ ஏமாற்றப் பட்டிருக்கிறார். அதனால் துக்கம் கொண்டுள்ளார், துக்கத்தின் விளைவு கோபம். ஏமாற்றம்—துக்கம்— கோபம். வட நாட்டு வாழ்க்கை முறையிலேயும் அரசியல் போக்கிலேயும் எவ்வளவு வெறுப்பு ஏற்பட்டிருந்தால் ஆச்சாரியார் இப்படிப் பேசியிருக்க வேண்டுமென்பதை வாசகர்கள் எண்ண வேண்டும். இருவேறு கருத்துக்களைக் கொண்ட நாடுகள், தனித்தனியே பிரிந்து வாழ வேண்டுமென்று, பெரியார் இராமசாமி கூறுவதிலே, என்ன தவறு இருக்கிறதென்று அதனோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆச்சாரியாரே! கவர்னர் ஜெனரல் பதவியை விட்டெறிந்து விட்டு தென்னாட்டு அரசுரிமைக்காகப் போராடுங்கள். வட நாட்டு கங்காணியாக இருக்காதீர்கள். உங்கள் மூளை, அன்பும் ஆதரவும் அமைதியும் நிறைந்த தென்னாட்டு மக்கள் வாழ்வுக்காகப் பயன் படட்டும். சமுதாயத்திலுள்ள குறைகளைக் களைந்து, சரி நிகர் சமமாக வாழ்வோம். வாரீர்'' என்றுதானே அழைக்கிறோம். "வறண்ட பாலை வனத்தை விட்டு வளமார் எமது திராவிடத்திற்கு வாருங்கள், வர்ணாஸ்ரம முறையை ஒழியுங்கள்'' என்றுதானே கூறுகிறோம். "தென்னாட்டு மக்களிடத்தே அன்பு ஆதரவு அமைதி இருக்கிறதென்று ஜவஹர் பேசியது போன்று, பேசி, இனியும் ஏமாற்றவேண்டா'' மென்றுதானே இறைஞ்சுகிறோம்.

"சந்திரா''

---

காந்தியைக்காத்த தில்லையாடி. வள்ளியம்மை, அன்னை நாகம்மையார் ஆகியோர் பிறந்த நாடு.

உயிர் தித்திப்பை எண்ணிடாமல் தீங்குள்ள இந்தியை எதிர்க்க எழுங்கள் அறப்போருக்கு. விவேகமற்ற 'வெள்ளிமணி'யையும், தகிடு தத்தங்கள் செய்து திரியும் இந்து வகையறாவையும் "ஒக்கவே வாழ்வோம் மக்கள்'' என்று வரட்டு உபதேசம் செய்யும், மிக்க நலம் படைத்த சொக்கலிங்கத்தையும் பற்றிய நினைப்பு இப்போது வேண்டாம்.

வாரீர் போருக்கு! சேரீர் அறப்போர்ப்படையில்!! படையில் சேர்ந்து, தொண்டாற்ற வசதியில்லாதவர்கள், இயலாதவர்கள் போர் வெற்றியடையப் பொருளுதவி தாரீர். தமிழ்காக்க, வாரீர்! உடன்படையில் சேரீர்!! இந்தியென்னும் மந்தி மொழி மறைந்தொழிய இயன்றஅளவுபொருளுதவி தாரீர். பொது மக்களே! ஒத்துழைக்க உடன் புறப்படுங்கள். தமிழர்களாய் வாருங்கள்.

வெல்க தமிழ்! வெல்க பெரியார்!!

"தமிழ் ஒலி''

---

[2ம்பக்கத் தொடர்ச்சி]

அதற்கு அம்பலக்காரர் ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாக இருப்பதைக் கண்ட குமரனின் தாயார் 'ஆமடா கண்ணே! அதுவும் ஒரு சாஸ்திரந்தானே! நீ உன் பள்ளிக்கூடத்தில் பூகோள சாஸ்திரம், தாவர சாஸ்திரம் என்று பல சாஸ்திரங்களைப் படிக்கிறாயல்லவா? அதைப்போலவே சோதிட சாஸ்திரம் என்றும் ஒரு சாஸ்திரம் இருக்கிறது' என்றாள்.

'அப்படியானால், அதை ஏனம்மா பள்ளிக்கூடப் பாடங்களில் ஒன்றாக வைக்கவில்லை?' என்று கேட்டான் குமரன்.

'அது என்னமோப்பா எனக்குத் தெரியவில்லையே!' என்றாள் கும

ரனின் தாயார். அப்போது, அம்பலக்காரர் 'பள்ளிப் பிள்ளைகளுக்குச் சோசியம் கற்றுக்கொடுப்பதால், பிற்காலத்தில் அப்பிள்ளைகளால் அரசாங்கத்திற்கு என்னடா பிரயோசனம்?' என்று கேட்டார்.

'ஏம்ப்பா பிரயோசனமில்லை? மாணாக்கர்கள் சோசியப் பரீட்சையில் தேர்ச்சிபெற்று பதவிக்கு வரமுடிந்தால், இரகசியப் போலீஸ் இலாகாவையே நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இரண்டு சோசியப் பட்டதாரிகளை நியமித்து விட்டால் அரசாங்கத்திற்கு எவ்வளவு இலட்சக் கணக்கான ரூபாய்கள் மிச்சப்படும்!

கொஞ்சங்கூடச் சங்கடமே இல்லாமல் திருடர்களையும், திருட்டுக்களையும் கண்டுபிடித்து விடலாமே! உண்மையான குற்றவாளிகளையும், கொலையாளிகளையும் கண்டுபிடித்து நிரபராதிகளின் உயிர்களைக் காப்பாற்றலாமே! இன்னும் அரசாங்கத்தின் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வி என்பதே இல்லாமல் செய்துவிடலாமல்லவா?

சோசியம் உண்மையானதாக இருந்தால், இவ்வளவு காலமாக அரசாங்கத்தார் அந்த சாஸ்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளாமல் சோம்பேறிகளாய் ஏன் இருந்தார்கள்? அல்லது சோசியம் பொய்யானதாக இருந்தால், அந்தப் பித்தலாட்டங்களை ஏன் இந்த அரசாங்கத்தார் சூதாட்டம்போல் கருதித் தடைவிதிக்காமல் இருந்தனர்?'' என்று கேட்டான் படுக்கையில் கிடந்தவாறே பல நாள் சிந்தித்து வந்த குமரன்.


அம்பலக்காரர் உள்ளத்தில் ஏதோ ஓர் புதிய உணர்ச்சி சுளீர் என்று பாய்ந்தது! உடனே குமரனைக் கட்டித்தழுவி 'என் கண்மணியே! பகுத்தறிவுச் சுடரே!! இனிமேல் இந்தக் குன்னக்குடிக்கு ஏழேழு தடவைகள் காவடி எடுத்தாலும், எந்தப் பார்ப்பானும் நம் வீட்டு நன்மை தீமைகளில் தலையிடவோ, ஒரு செம்புச் சல்லியைக் கூடச் சுரண்டிக்கொண்டு போகவோ நான் அனுமதிக்கவே மாட்டேண்டா கண்ணே! என்றார்.

உடனே குமரன் மகிழ்ச்சியோடு குதித்தெழுந்து பள்ளிக்கூடத்திற்கு ஓடி விட்டான். அவன் நோய் போன இடமே தெரியவில்லை. அன்று முதல் அம்பலக்காரர் வீட்டில் 'பகுத்தறிவுச் சுடர்' பிரகாசிக்க ஆரம்பித்து விட்டதைக் கண்ட குன்னக்குடிப் பார்ப்பனர்கள், குழவிக்கல்லைக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருக்கின்றனர்.

★

உண்மையிலேயே அரசியலிலோ, மத இயலிலோ, சமுதாய இயலிலோ, மொழி இயலிலோ, இந்திக்கும்-தமிழுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று யாரும் ஒப்புக்கொள்வார்கள்.

ம. பொ. சி.



அறிஞர் அண்ணாதுரை.

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறுகதைகள் | 1 | 0 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| உலக பெரியார் காந்தி | 1 | 0 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| மகாத்மா காந்தி | 0 | 3 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE